


விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 41 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை (04.12.2024)






## மாகாண சபை தொடர்பில் அரசின் நிலைப்பாடு..?

## முறைமையை நீக்கும் தீர்மானம் எதுவுமில்லை



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எந்தவொரு தீர்மானத்தையும் தற்போதுவரை எடுக்கவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு மூன்று வருடங்களின் பின்னரே கொண்டுவரப்படும். அதிகாரப்பகிர்வு தொடர்பில் கலந்துரையாட போதுமான கால அவகாசம் உள்ளது. புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறை தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங்களுக்கு அப்பாலான அதிகாரப்பகிர்வு இருக்காது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாகாண சபை முறையை நீக்கப்பட உள்ளதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, கூறியுள்ள கருத்து தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த (தொடர்ச்சி...) 02

# இணைப்பங்காளர்களாக விரும்புகிறோம்



## சிங்கள மக்களுடன் பேச்சுகள் நடத்த தமிழர்களின் சமாதான கதவு திறந்தே உள்ளது

சிங்கள மக்களுடன் பேசுவதற்கு தமிழ் மக்கள் தங்கள் சமாதான கதவுகளை எப்போதும் திறந்தே வைத்துள்ளனர். சமஷ்டி அடிப்படையில் தமிழ் மக்கள் தங்களை தாமே ஆளும் சுயாட்சியுடனான புதிய அரசியலமைப்பை உருவாக்கி, இலங்கைத் தீவின் இணைபங்காளர்களாக தமிழர்களை ஏற்றுக்கொள்ள, அரசியல் பேச்சுகளை சிங்கள மக்களுடன் நடத்த தயாராக உள்ளோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதம் நேற்று (03) செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில்நடைபெற்றது. இவ் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், ஜே.வி.பி இன்று தேசிய மக்கள் சக்தியாக மாற்றமடைந்திருந்தாலும் ஜே.வி.பியின் அரசியல் முயற்சிகள் 1971ஆம் ஆண்டு மற்றும் 1989ஆம் ஆண்டில் இராணுவத்தால் தோற்கடிக்கப்பட்டிருந்தது. 55 வருடங்களின் பின்னர் அவர்கள் ஜனநாயக முறையின் ஊடாக இலங்கையின் ஆட்சியை கைப்பற்றியுள்ளமை வரலாற்றில் ஓர் அடையாளமாகும்.

அதேபோன்றுதான் ஜனநாயக ரீதியாக உரிமைகள் ஆயுத முனைகொண்டு மழுங்கடிக்கப்பட்ட (தொடர்ச்சி...) 02

## ஜனாதிபதியை சந்தித்து பேச ஸ்ரீதரனுக்கு ஏற்பாடு

### விமல் ரத்நாயக்க



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

மாகாண சபை முறை நீக்கப்படுமா இல்லையா என்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் நேரடியாக கலந்துரையாடல்களை நடத்த இலங்கை தமிழரசுக் கட்சிக்கு ஏற்பாடு செய்துதர அரசாங்கம் தயார் என சபை முதல்வரும் (தொடர்ச்சி...) 02

## நாடாளுமன்ற அமர்வு இன்று இரவு 9.00 வரை

நாடாளுமன்றம் இன்று (04) இரவு 9.00 மணி வரை நடைபெறும் என நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த சில நாட்களாக நிலவிய சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட அனர்த்த நிலை தொடர்பிலான சபை ஒத்திவைப்பு விவாதத்தை இன்று மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

## சொல்வதைச் செய்பவர்களாக இருந்தால் அடக்குமுறையை நிறுத்துங்கள் - சஜித்

தேர்தல் பிரசாரங்களில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறிய தற்போதைய அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி, தற்போது ஊடகங்களை ஒடுக்கி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். நேற்று (03) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

“அரசாங்கத்திற்குமக்கள்ஆணையைப் பெறுவதற்கு (தொடர்ச்சி...) 02

## உயர்தரப் பரீட்சை இன்று மீள ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று புதன்கிழமை முதல் மீள ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனர்த்த நிலைமைகளால் உயர்தரப் பரீட்சை இரண்டு சந்தர்ப்பங்களில் ஒத்திவைக்கப்பட்டன. இந்தநிலையில் இன்று (தொடர்ச்சி...) 02



## அர்ச்சுனா எம்.பி.யை தாக்கியதாக சபையில் குற்றச்சாட்டு

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா தம் மீது தாக்குதல் நடத்தியதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது. (தொடர்ச்சி...) 02






நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டு இதுவரை நீதி கிடைக்காத 32 தமிழர்களின் நினைவேந்தல் முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்தில் இடம்பெற்ற போது...

## லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

(பாலகணேஷ் டிலுக்ஷா)

லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் டிசம்பர் மாதம் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

மாதாந்த எரிவாயு விலை திருத்தத்தின் பிரகாரம், டிசம்பர் மாத விலை திருத்தம் இன்று (04) அறிவிக்கப்படும் என கூறப்பட்ட போதிலும் (தொடர்சி) 02

## பயிர் சேதம்: அரிசியை இறக்குமதி செய்யும் அளவுக்கு பாரதூரமானதல்ல

(கனுஷியா புஷ்பகுமார்)




நாட்டில் மோசமான காலநிலையினால் ஏற்பட்டுள்ள பயிர் சேதம் அரிசியை இறக்குமதி செய்யும் அளவுக்கு பாரதூரமானதல்ல என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் டபிள்யூ.எச். துமிந்த பிரியதர்ஷன தெரிவித்தார். பிரதான சிங்கள ஊடகமொன்றிடம் கருத்து தெரிவிக்கும் போதே (தொடர்ச்சி...) 02

## டியாகோ கார்சியா தீவில்

## சிக்கித் தவித்த 60 இலங்கையர்கள் பிரிட்டனுக்குள் தற்காலிக அனுமதி



இந்தியப் பெருங்கடல் தீவான டியாகோ கார்சியாவில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தங்கியிருந்த புலம்பெயர்ந்த இலங்கையர்கள் குழுவொன்று இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. 16 குழந்தைகள் உட்பட 60 பேர் (தொடர்ச்சி.) 02

## முறைமை மாறினால் தமிழர் உணர்வை பாதிக்கும் - டக்ளஸ்

மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வை நீக்குவதற்கு முயற்சிக்கப்படுமாயின், அது தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கும் செயல் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா (தொடர்ச்சி...) 02

## பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கே.பி. மனதுங்க



(கனுஷியா புஷ்பகுமார்)

பொலிஸ் ஊடகப் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், ( 02

## டியாக்கோ..

அடங்கிய இலங்கைத் தமிழர்கள் குழுவொன்றே இவ்வாறு இங்கிலாந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பிபிசி தெரிவித்துள்ளது.

பிபிசி செய்திச் சேவையின் தகவல்களுக்கு அமைவாக, இங்கிலாந்து வெளிவிவகார அலுவலகத்தின் நிதியுதவியுடன், இலங்கைத் தமிழர்கள் ஆறு மாதங்கள் இங்கிலாந்தில் தங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் தஞ்சமானது நீண்டகாலமாக அவர்கள் எதிர்நோக்கிய துன்புறுத்தல்கள், சிரமங்கள் மற்றும் சிக்கலான சட்டப் போராட்டங்கள் முடிவுக்கு வந்துள்ளது. எனினும், அவர்களின் எதிர்காலம் இன்னும் நிச்சயமற்றதாகவே உள்ளது.

உள்நாட்டு மோதல்கள் காரணமாக இலங்கையை விட்டு வெளியேறிய 16 சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 64 இலங்கைத் தமிழர்கள் கொண்ட குழு, ஏனைய நாடுகளுக்கு நுழைய அனுமதி மறுக்கப்பட்ட பின்னர் 2021 ஒக்டோபர் மாதம் முதல் தொலைதூர தீவான டியாகோ கார்சியா தீவில் சிக்கித் தவித்துள்ளது.இந்த குழுவினர் தீவில் அடிப்படை வசதிகள் இன்றி மிகவும் மோசமான நிலையில் வசித்து வந்துள்ளனர்.இவர்கள் தீவிலிருந்த காலப்பகுதியில், பல உண்ணாவிரதங்கள் மற்றும் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டதாகவும் அதில் சிலர் சிகிச்சைக்காக ருவாண்டாவிற்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. முகாமுக்குள் பாலியல் வன்கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளும் பதிவாகியுள்ளதாக "பிபிசி" தெரிவித்துள்ளது.

குற்றவியல் தண்டனை பெற்ற இருவரும் மற்றும் விசாரணையில் உள்ள ஒருவருக்கும் இங்கிலாந்துக்கு நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் மூவரும்

தொடர்ந்து டியாகோ கார்சியா தீவிலேயே

வைக்கப்பட்டிருப்பார்கள்

என கூறப்படுகிறது.

# மாற்றத்திற்கான வாய்ப்பை நாம் ஒருபோதும் தவற விட மாட்டோம்: பிரதமர் ஹரிணி



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் ஆணையைப் பெற்ற, வரலாற்று மாற்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் செயல்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று (03) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"இந்த நாட்டு மக்கள் தங்களிடம் உள்ள இறையாண்மையின் மூலம் நீண்டகாலமாக ஆட்சி செய்து வந்த பாரம்பரிய அரசியலை நிராகரித்து புதிய அரசியல் கலாசாரத்திற்காக அணி திரண்டுள்ளனர்.

மக்கள் வழங்கியுள்ள இந்தச் செய்தியை, நன்கு புரிந்து செயல்பட வேண்டும்.

"நமது நாட்டின் வாக்காளர்கள் எதை எடுத்துக்காட்டினார்கள்? அவர்கள் நிராகரிப்பது அரசியலை அல்ல, ஊழல் அதிகாரத்தை,துஷ்பிரயோகம் செய்யும் அந்த அரசியல் கலாசாரத்தை நிராகரிக்கிறார்கள என்றார்

## பயிர்ச்தேசதம்.

அவர் இதனை தெரிவித்தார்.

பயிர்ச் சேதத்தின் பின் எஞ்சியுள்ள உற்பத்தி ஏழு மாதங்களுக்குப் போதுமானதாகவும், எதிர்வரும் பெரும்போகத்திற்கான உற்பத்தி மேலும் 6 மாத கால பாவனைக்கு போதுமானதாக இருப்பதுவுமே இதற் குக் காரணம் என பிரியதர்ஷன குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பெரும்போகத்தில் குறைந்தது 7 மாதங்களுக்கு போதுமான உற்பத்தி கிடைக்கும் என்பதால், எதிர்பார்க்கும் உற்பத்தி மூலம் பாதிப்பு தொடர்பில் பதற்றப்படும் நிலை இல்லை என்றும் அவர் கூறினார்.

வருடாந்த அரிசி தேவையில் 65 வீதமான நெல் உற்பத்தி கிடைக்கும் பெரும்போகத்தில் சுமார் 20 இலட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் பயிரிடப்படும் எனவும்,அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் 30 இலட்சம் மெட்ரிக் டொன் அரிசி உற்பத்தியானது 9 மாதங்களுக்கு உள்ளூர் பாவனைக்கு போதுமானதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

## மாகாண...

விடயமாக இந்தக்

கருத்து மாறியுள்ளதால் இதுதொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் நேற்று (03) நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியிடம் விசேட கூற்றொன்றை முன்வைத்து கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதில் அளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க,

"இராசமாணிக்கம் சாணக்கியன் மீது மிகுந்த மரியாதை கொண்டிருக்கிறோம். ஏனையோர் சொல்வதைக் கேட்டு முறையற்ற சந்தேகங்களை எழுப்ப வேண்டாம்.

இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் ஸ்ரீதரன் இது விடயமாக ஜனாதிபதியிடம் கலந்துரையாடல் ஒன்றுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

ஜே.வியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுடன் அன்றி ஜனாதிபதியுடன் சந்திப்புக்கு ஒழுங்குபடுத்தி தருகிறோம். அதன்போது இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தலாம்." என்றார்.

இதேவேளை, நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ,

மாகாண சபை முறையை நீக்குவது தொடர்பில் இந்தத் தருணம்வரை அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. புதிய அரசியலமைப்பை கொண்டுவர மூன்று வருடங்கள் வரை செல்லும். அதனால் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற முறை தொடர்பில் தமது சிபாரிகளை அனைவரும் முன்வைக்கலாம்.

மக்களுடனான கலந்துரையாடலின் பின்னரே புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும். இதுதொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்த போதிய கால அவகாசம் உள்ளது. மாகாண சபை முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை. புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் தருணத்தில் இதுதொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தலாம். மாகாண சபை முறை புதிய அரசியலமைப்பில் தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங்களுக்கு மேலதிகமான அதிகாரங்கள் வழங்கப்படாது என்பதுடன் குறைக்கவும் படாது." என்றார்.

## லிற்ரோ எரிவாயு...

நேற்றைய தினமே இந்த அறிவிப்பு வெளியானது.

உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரித்த போதிலும் உள்நாட்டு எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், எரிவாயு விலைகளை அதிகரிக்காதிருக்க தீர்மானித்துள்ளதாக லிட்ரோ கேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

சிறந்த பங்கு முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவத்தினால் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்க முடிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 3,690 ரூபாவிற்கும், 05 கிலோ கிராம் சமையல் எரிவாயு 1,482 ரூபாவிற்கும், 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயு 694 ரூபாவிற்கும் தற்போதைய விலைக்கே விற்பனை செய்யப்படும் என தெரிவித்துள்ளது.

## முறைமை மாறினால்...

வலியுறுத்தியுள்ளார்.

ஆட்சிப் பீடமேறியுள்ள தற்போதைய அரசாங்கத்தினால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் 13 ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படும் என்று ஆளுங்கட்சி முக்கியஸ்தர்களுள் ஒருவரான ரில்வின் சில்வா அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகத்தினால் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

"தற்போதைய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாணசபைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு என்பது, இதுவரை காலமும் கௌரவமான அரசியல் உரிமைகளை இந்த நாட்டிலே பெற்றுக்கொள்வதற்காக தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்களுக்குக் கிடைத்துள்ள சிறிதளவான பரிகாரமாகவே நோக்கப்படுகின்றது.

மாகாணசபை முறைமையினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலமே தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கான தீர்வை காண முடியும் என்பதை ஈ.பி.டிபி. கட்சியினாராகிய நாமும் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வருகின்றோம்.

கடந்த காலங்களில் 13 ஆம் திருத்தச் சட்டத்தினை பாதுகாப்பதற்காக பல்வேறு முயற்சிகளையும் நாம் மேற்கொணாடிருந்தமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அண்மையில் சிநேகிதபூர்வமாக உங்களை சந்தித்த வேளையிலும், 13 ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினையும், அதனைக் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்துவது சாத்தியமான பொறிமுறையாக இருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்களின் கணிசமான ஆதரவு உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற நிலையில், அவர்களின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட மாட்டீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களுக்கு, புதிய அரசியலமைப்பு தொடர்பாக சிந்திப்பதற்கு முன்னர் தற்போதைய அரசியலமைப்பினை முழுமையாக நடைமுறைப்படுத்திப் பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆக, உங்களுக்கு இருக்கும் தார்மீக கடப்பாட்டின் அடிப்படையிலும், தேர்தல் காலத்தில் எமது மக்களுக்கு நீங்கள் வழங்கிய உத்தரவாதத்தின் அடிப்படையிலும், 13 ஆம் திருத்தச் சட்டத்தினை தொடர்ந்தும் பாதுகாப்பதோடு மாகாணசபைகளுக்கான தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியை...

அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபை முறை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாடாளுமன்றில் தெளிவுபடுத்த வேண்டும் என தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி இராசமாணிக்க சாணக்கியன் நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சிறப்பு கூற்றை முன்வைத்து எழுப்பி கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"இராசமாணிக்கம் சாணக்கியன் மீது மிகுந்த மரியாதை கொண்டிருக்கிறோம். ஏனையோர் சொல்வதைக் கேட்டு முறையற்ற சந்தேகங்களை எழுப்ப வேண்டாம்.

இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் ஸ்ரீதரன் இது விடயமாக ஜனாதிபதியிடம் கலந்துரையாடல் ஒன்றுக்கு கோரிக்கை விடுத்திருப்பதார். ஜே.வியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுடன் அன்றி ஜனாதிபதியுடன் சந்திப்புக்கு ஒழுங்குபடுத்தி தருகிறோம். அதன்போது இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தலாம்." என்றார்.

## உயர்தர...

புதன்கிழமை முதல் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள கால அட்டவணைக்கு அமைய பரீட்சை நடத்தப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகளை எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். போக்குவரத்து பிரச்சினைகளால் பரீட்சை நிலையத்திற்கு செல்வதில் சிரமத்தை எதிர்கொண்டுள்ள பரீட்சார்த்திகளுக்கு அருகிலுள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## அர்ச்சுனா...

இந்த விவாதத்தில் தமக்கு உரையாற்ற நேர ஒதுக்கீடுகள் எப்போது இடம்பெற்றுள்ளதென எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்துக்கு வினவச் சென்ற போதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை சிறப்புரிமை கேள்வியை முன்வைத்து உரையாற்றிய அர்ச்சுனா எம்.பி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் கலந்துரையாட எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்துக்குச் சென்றேன். எனக்கான நேரம் தொடர்பில் அறிந்துக்கொள்ளவே சென்றேன். அத்தருணத்தில் சுஜித் பெரேரா எம்.பி என் மீது தாக்குதல் நடத்தினார்.

நாடாளுமன்றத்திலேயே எம்மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டால் பாதையில் நாம் எவ்வாறு செல்வது?. எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்த விவகாரம் தொடர்பிலேயே என்மீது அவர் தாக்குதல் நடத்தினார். எனக்கும் கையை உயர்த்த முடியும். நான் ஒரு வைத்தியர். ஆனால், நான் அதை செய்ய மாட்டேன்." என்றார்.

இதன்போது குறிக்கிட்ட எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, "யாழ்.மாவட்ட எம்.பி அர்ச்சுனா, எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்துக்கு வந்து எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளரிடம் மோசமான முறையில் செயல்பட்டார். முறையற்ற வார்த்தைகள் மற்றும் கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தினார். அதனைதான் இவர் கூறுகிறார். இதுதொடர்பில் நாம் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளோம். சிலர் கல்விக் கற்றிருந்தாலும் அறிவித்தாவர்கள்.

இதுதொடர்பில் அவதானம் செலுத்தி பொருத்தமற்ற எம்.பிகளை எதிர்க்கட்சியில் அமரவிடாது வேறு இடத்தில் அமரச் செய்யுங்கள்" என்றார்.

இதன்போது குறிக்கிட்ட சுஜித் பெரேரா எம்.பி,

"நான் தாக்குதல் நடத்தியதாக அர்ச்சுனா எம்.பி என்மீது பாரிய குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார். அவ்வாறு எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை. அவரது குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிக்கிறேன். அவர்தான் எனக்கு அச்சுறுத்தல் விடுத்தார்.

மீண்டும் இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அர்ச்சுனா எம்.பி,

"இன்று பிற்பகல் 2.30 மணிக்கு எனக்கு எவ்வாறு நேரம் ஒதுக்கப்படும் என்று வினவ எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்குச் சென்றேன். நேரம் எவ்வாறு ஒதுக்கப்படுகிறது என்றே இதன்போது வினவினேன். சரியான தொடர்பாடலை அவர்கள் என்னிடம் பேணவில்லை.

நாளை நேரத்தை ஒதுக்குவதாக கூறினர். சுஜித் பெரேரா உள்ளிட்ட சிலர்தான் நேரத்தை ஒதுக்கீடு செய்வதாக கூறினர். அதை வினவ சென்றபோதுதான் அவர் என்மீது தாக்குதல் நடத்தினார். அவர்மீது தாக்குதல் நடத்த எனக்கும் ஒரு நெடி போதும். எனது தந்தையின் வயது இவருக்கு என்பதால் அதை நான் செய்யவில்லை." என்றார்.

இவ்வாறு தொடர்ந்த வாக்குவாத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் சம்பவம் தொடர்பில் சபாநாயகரிடம் முறைப்பாடு அளிக்குமாறு சபாபீடத்தில் இருந்த நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவர் ஹிமாளி வீரசேகர அர்ச்சுனா எம்.பியை அமைதிப்படுத்தினார்.

## பொலிஸ்...

பிரதி பொலிஸ்மா அதிபருமான நிஹால் தல்துவ, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக தொடர்ந்தும் பணியாற்றுவார் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## இணைப்பங்களர்களாக...

போதும், தடுக்கப்பட்ட போதும் தமிழர்கள் ஆயுத ரீதியான போராட்டமொன்றை முன்னெடுத்தனர். வன்முறை ரீதியாக தமிழர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட போது எமது இளைஞர்கள் துப்பாக்கிகளை தூக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தமிழர்களும் 80 வருடங்களுக்கு மேலாக நீண்ட போராட்டத்தை கொண்ட ஓர் இனமாகும். எமது உரிமைகள் இன்னமும் பெறப்படாத நிலையில் ஜே.வி.பியை போன்று ஒரு வரலாற்றை கொண்ட இனமாக உள்ளோம்.

ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையில் நாட்டில் 80 வருடங்களாக புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களுக்கான தீர்வு, இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. இது ஒரு துர்பாக்கியமான விடயம். சிங்கப்பூராகவும் மலேசியாவாகவும் மாறியிருக்க வேண்டிய நாடு ஏன் இத்தகைய பாரிய கடன் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு என்றால், யுத்தம் காரணமாக வாங்கிய கடன்களாகும். அந்த கடன்கள் இன்று நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுசென்றுள்ளது.

அதனை மறுக்கக்கூடிய வகையிலும் அல்லது இல்லை என்றது போன்றும் ஜனாதிபதியின் உரை அமைந்துள்ளது. கோட்டாய ராஜபக்சவும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு வார்த்தைகூட தமது சிம்மாசன உரையில் பேசியிருக்கவில்லை. அவருக்கு என்ன நேர்ந்தது என்பதை மீட்டிபார்க்க வேண்டும்.

தேர்தலில் மக்களின் ஜனநாயக தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம். சிங்கள சகோதரர்கள் தமிழர்கள் மீது நடத்திய யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கண்ணீர் சிந்தியவர்கள் நாம். யுத்ததால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்ட இனம் நாம். காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அகதி முகாம்களில் எமது வாழ்கை முறை உள்ளது. நாம் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஓர் இனம். இந்த நிலையிலும்கூட உங்களோடு எமது கரங்களை கோர்த்து பயணிக்க விரும்புகிறோம்.

பலமான மாற்றங்களோடு தமிழ் மக்கள் தமது மாற்றங்களை நோக்கி பயணிக்க விரும்புகின்றனர். சமஷ்டி பற்றி முதலில் பேசிய சிங்கள தலைவராக பண்டாரநாயக்க இருக்கிறார். தமிழர்களுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் கிழித்தெரியப்பட்டுள்ளன. இதில் இலங்கை – இந்திய ஒப்பந்தம் மிக முக்கியமானது.

13ஆவது திருத்தச்சட்டம் இலங்கையில் தமிழர்களின் அரசியல் பிரச்சினையை தீர்ப்பதற்காக கொண்டுவரப்பட்ட ஒன்று. அது இன்றுவரை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாது கேள்விக்கு உட்படுத்தப்பட்ட வகையில் காணப்படுகிறது.

இன்று எதையும் செய்யக் கூடிய வகையில் பலம் அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. 1972, 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புகள் தமிழ் மக்களின் விருப்பதுக்கு மாறாக கொண்டுவரப்பட்டது. அது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படவும் இல்லை.

புதிய அரசியலமைப்பை கொண்டுவர சந்தர்ப்பம் இந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. சர்வஜன வாக்கெடுப்பொன்று புதிய அரசியலமைப்புக்கு நடத்தப்பட வேண்டும் என்பது சட்டமாகும். புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களுக்காக நீதி எவ்வாறு நிலைநாட்ட போகிறது.

நீண்டகாலமாக தமிழர்கள் போராடி வருகின்றனர். 4 இலட்சம் வரையான தமிழர்கள் உயிரிழந்துள்ளனர். 60ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் உயிரிழந்துள்ளனர். கோடிக்கணக்கான சொத்துகள் அழிக்கப்பட்டுள்ளன.

## செல்வதை...

சமூக ஊடகங்கள் உதவியாக இருந்தன, எனினும் ஆட்சிக்கு வந்த பின்னர் சட்டத்தைப் பயன்படுத்தி சமூக ஊடக ஆர்வலர்களை ஒடுக்கி வருகின்றனர்.

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடக வேட்டையில் ஈடுபடுவது நியாயமா?

இவ்வளவு பெரிய மக்கள் ஆணையைப் பெறுவதற்கு சமூக ஊடகங்கள் மூலம் உங்களுக்கு நிறைய ஆதரவு கிடைத்தது.

ஆனால் தற்போது நீக்கப்படும் என்று கூறப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூலம் இந்த சமூக ஊடக ஆர்வலர்கள் வேட்டையாடப்படுகிறார்கள்.

நீங்கள் சொல்வதைச் செய்பவர்களாக இருந்தால் இந்த அடக்குமுறையை நிறுத்துங்கள்." எனத் தெரிவித்தார்.

# ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் 100 முகாம்களில் தஞ்சம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சமீபத்திய சீரற்ற காலநிலையால் இதுவரை 18 மரணங்கள் சம்பவித்துள்ளன. 19 பேர் காயமடைந்துள்ளனர். நேற்றைய நிலவரத்தின் படி, இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த விவரங்களின்படி நாட்டிலுள்ள 24 மாவட்டங்களைச் சேர்ந்த 226 பிரதேச செயலகப் பிரிவுகளில் சுமார் 1 இலட்சத்து 39 ஆயிரத்து 512 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 68 ஆயிரத்து 732 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சுமார் 100 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். 2613 இற்கு மேற்பட்ட வீடுகள் பெரு வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளன. இவற்றில் 103 வீடுகள் முற்று முழுவதுமாகச் சேதமடைந்துள்ளன. இதனிடையே கம்பஹா மாவட்டத்தில் 74 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ அறிவித்துள்ளார்.

இயற்கை இடரின் விளைவாக மீனவர்களும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளதாகக் கூறிய அமைச்சர், மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்தும் மதிப்பீடு செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இதேவேளை, சமீபத்திய மழையுடனான சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் 345 மில்லியன் ரூபாவை நிவாரணமாக ஒதுக்கியுள்ளதாக பிரதியமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார். வீடுகள் சொத்துக்கள் வர்த்தக நிலையங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக நஷ்ட ஈடு வழங்கப்படவிருப்பதாகவும் பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக தகவல் திரட்டும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சீரற்ற காலநிலையின் விளைவுகளால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பகுதிகளில் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் பற்றிய தகவல் திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய, கமநலக் காப்புறுதிச் சபையின் தலைவர் பிறேமசிறி ஜாசிங்ஹ ஆராச்சி தெரிவித்துள்ளார். பொலொன்னறுவை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் கண்காணிப்பு வேலைகள் திங்களன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் ஒரு வாரகாலத்திற்குள் விவசாயச் செய்கையில் ஏற்பட்டுள்ள சகல பாதிப்புக்களையும் மதிப்பீடு செய்து இழப்பீடு வழங்க அரசாங்கம் முனைப்புக் காட்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 19ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்:** பண விடயங்களில் கவனம். உங்கள் எதிர்பார்ப்புகளின்படி இருக்காது.

**ரிஷபம்:** புதிய முதலீடுகளுக்கு நிலையான தொகை தேவைப்படும், தேவையற்ற செலவினங்காலை தவிர்க்கவும

**மிதுனம்:** மற்றவர்கலைப் பற்றி புகார் கூறுவதும் மனம் உடைந்து போவதும் எந்தப் பயனையும் தராது.

**கடகம்:** இன்று பணத்தின் வருகை பல நிதி சிக்கல்களில் இருந்து உங்களை விடுவிக்கும்.

**சிம்மம்:** இன்னும் எதையாவது வாங்கச் செல்வதற்கு முன்பு, ஏற்கெனவே உள்ளதைப் பயன்படுத்துங்கள்.

**கன்னி:** இன்று உங்கள் தேவையற்ற பணம் செலவழிப்பதை தவிர்க்கவும் இல்லையெனில் பணச் சிக்கல் ஏற்படும்.

**துலாம்:** இன்று உங்கள் பெற்றோர்களின் ஒருவர் உங்களை பணம் சேமிப்பை கடைபிடிக்க அறிவுறுத்துவார்கள்.

**விருட்சிகம்:** இன்றும் யாருக்கும் கடன் கடுக்காதீர்கள், அதைக் கொடுக்க வேண்டிய அவசியம்.

**தனுசு:** நோயின் பாதிப்பில் இருந்து கவனத்தை திசைதிருப்ப ஏதாவது வேலையில் ஈடுபடுங்கள்.

**மகரம்:** வணிகர்கள் உங்கள் பணத்தை கேட்கும் திருப்பித் தராத தங்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும்.

**கும்பம்:** அழையா எந்த விருந்தினரும் இன்று வீட்டிற்கு வரலாம். சற்று உஷாராக இருக்கவும்.

**மீனம்:** பரந்தமனதுடன் கூடிய செயல்களால் இவற்றை நீங்கள் வெற்றி காண முடியும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** துவிதியை திதி மதியம் 01:21 PM அதன் பிறகு திரிதியை திதி.
**நட்சத்திரம்:** மூலம் நட்சத்திரம் மாலை 05:23 PM அதன் பிறகு பூராடம் நட்சத்திரம்.
**யோகம்:** அமிர்த-சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** கார்த்திகை.
**இராகு காலம்:** மதியம் 03:00 PM முதல் 04:30 PM வரை,
**குளிகை:** மதியம் 12:00 PM முதல் 01:30 PM வரை,
**எமகண்டம்:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை,

# பதவி நீக்கப்பட்ட நிஹால் தல்துவ குற்றப் புலனாய்வுப் பிரிவில்



(எஸ்.டொரின்)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதன்படி, புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பதவியேற்றுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. மனதுங்க கந்தளாய் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றியுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய காலத்தில் ஊடகவியலாளர்கள் கேட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் தனக்குத் தெரியாது என பதிலளித்த பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ, கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், தற்போது அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

எனினும், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக தொடர்ந்தும் பணியாற்றுவார் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

5 பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் 35 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.இது தவிர 7 பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 7 உதவி பொலிஸ் அத்தியட்சர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# எல்லை தாண்டிய மீன்பிடி : 18 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம் – சுண்டிக்குளம் கடற்பரப்பில் நேற்று (03) அதிகாலை அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 18 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதன்போது மீன்பிடி விசைப்படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரம சூரிய தெரிவித்துள்ளார்.

கைதான இந்திய மீனவர்கள் அனைவரும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 515 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இதுவரை 66 இந்திய மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மின் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான புதிய முன்மொழிவு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மின்சாரக் கட்டணங்களைத் திருத்துவது பற்றி இலங்கை மின்சாரசபை தயாரித்துக் கொண்டிருக்கும் பிரேரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை (டிசம்பர் 6) பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையைத் தயாரிக்கும் வேலைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் ஏ.டி.கே. பராக்கிரமசிங்ஹ தெரிவித்துள்ளார்.

பிரேரணையில் அடங்கியுள்ள யோசனைகளை ஆராய்ந்த பின்னர் மின்சாரக் கட்டணத்தை எத்தனை சதவீதத்தால் குறைக்கலாம் என்பதை ஆணைக்குழு தீர்மானிக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்கான முன்மொழிவுகளை வழங்குவதற்கு 2024 டிசம்பர் 06ஆம் திகதி வரை இலங்கை மின்சார சபைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கால அவகாசம் வழங்கியிருந்தது.

மின்சாரக் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ள குறைந்தது 6 வாரங்களாவது தேவைப்படும் எனவும், அதற்கமைய இந்த வருடத்துக்குள் மின்கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து விழுந்து ஆஸி. பிரஜை உயிரிழப்பு

அவுஸ்திரேலிய பிரஜை ஒருவர் (வயது 51) கொள்ளுப்பிட்டி கிரெஸ்கட் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து நேற்று (03) கீழே விழுந்து மரணமாகியுள்ளார். இரட்டைக் குடியுரிமை பெற்ற அவர் கட்டிடத்தின் 7வது மாடியில் தற்காலிகமாக தங்கியிருந்ததாக தெரிவித்த பொலிஸார், கீழே குதித்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டிருக்கலாம் என சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடாளுமன்றத்தில் என்மீது தாக்குதல் நடத்தப்பட்டது

## அர்ச்சுனா எம்.பி. புகார்



நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சுஜித் என்ற எம்பி தம்மைத் தாக்கியதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"முதன் முறையாக நான் நாடாளுமன்றத்திற்கு வந்துள்ளேன். எனக்கு ஒதுக்கியிருக்கும் நேரம் தொடர்பில் பேசுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் சென்றேன். அப்போது சுஜித் என்ற நபர் என்னைத் தாக்கினார். நாடாளுமன்றத்திற்குள் இப்படி நடந்தால் எப்படி? நாம் எப்படி பொது வெளியில் செல்வது? குழுக்களின் பிரதித் தலைவரே இது தொடர்பில் சபாநாயகரிடம் தெரியப்படுத்துங்கள்" என்றார்.

# நான் யாரையும் தாக்கவில்லை

## சுஜித் சஞ்சய் பெரேரா எம்.பி மறுப்பு



தான் யாரையும் தாக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய் பெரேரா நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார். யாழ்.மாவட்ட சுயேட்சை எம்.பியான இராமநாதன் அர்ச்சுனாவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே சஞ்சய் பெரேரா எம்.பி மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

சுஜித் சஞ்சய் பெரேரா மேலும் உரையாற்றுகையில்,

நான் அவரைத் தாக்கியதாக அவர் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அதை முற்றிலுமாக நிராகரிக்கிறேன். யாழ்.மாவட்ட சுயேட்சை எம்.பியான இராமநாதன் அர்ச்சுனா எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு வந்து மிகவும் அநாகரிகமாக நடந்து கொண்டார். வேண்டத்தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தார். நாம் இது தொடர்பில் சபாநாயகருக்கு அறிவித்துள்ளோம்.சிலர் படித்த பண்பானவர்களாக இருந்த போதும் அவர்களின் நடத்தை அநாகரிகமானதாக இருக்கிறது.அவரை எதிர்க்கட்சி வரிசையில் அமர்த்த வேண்டாம்.வேறொரு இடத்தை வழங்கவும் என்றார்.

# மு.கா தேசிய பட்டியல்:எம். பியாக எஸ். எம்.நளீம் சத்தியப்பிரமாணம்



முஸ்லிம் காங்கிரஸை ப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட எஸ். எம்.நளீம் நேற்று நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். சபாநாயகர் அசோக ரன்வல முன்னிலையிலேயே அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 87,038 வாக்குகளைப் பெற்று இரண்டு ஆசனங்களை வென்றது.கட்சிக்கு ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைக்கப்பெற்றது. அதன்படி, அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எஸ். எம்.நளீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 11.3 சதவீதம் உயர்வு

இந்த வருடத்தின் நவம்பர் 29ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 11.3 வீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் இலங்கை ரூபா பல வெளிநாட்டு நாணயங்களுடன் ஒப்பிடுகையில் வலுவடைந்துள்ளதாக அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதன்படி, யூரோவுடன் ஒப்பிடும்போது 16.7 சதவீதமும், ஸ்டேர்லிங் பவுணுடன் ஒப்பிடும்போது 11.6 சதவீதமும், சீன யுவானுடன் ஒப்பிடும்போது 13.6 சதவீதமும் இலங்கை ரூபா வலுவடைந்துள்ளது.

# பதவியேற்பிற்கு முன் பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவிக்க வேண்டும்

## ஹமாஸ் அமைப்புக்கு டொனால்ட் ட்ரம்ப் கெடு



ஜனாதிபதியாக, தான் பதவியேற்க முன்னர் பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் ஹமாஸ் அமைப்புக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறு இல்லையெனில் பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக நான் பெருமையுடன் பதவியேற்கும் 2025 ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னர் பணயக்கைதிகள் விடுவிக்கப்படாவிட்டால்,அதற்காக ஹமாஸ் நரக விலை கொடுக்க வேண்டியிருக்கும்" என்று ட்ரம்ப் கூறினார்.

இஸ்ரேலுடன் மோதல் ஆரம்பித்த நாளில் சுமார் 251 பேரை பணயக் கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது. அதேபோல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணயக் கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், ஹமாஸ் வசம் இன்னும் 101 பேர் பணயக்கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பணயக்கைதிகளாக உள்ளவர்களில் அமெரிக்காவை சேர்ந்தவர்களும் அடக்கம். பணயக் கைதிகளில் பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியானது. அதேவேளை, தங்கள் வசம் உள்ள பணயக்கைதிகளில் 33 பேர் கொல்லப்பட்டுவிட்டதாக ஹமாஸ் ஆயுதக்குழு தற்போது தெரிவித்துள்ளது.

இந்நிலையிலேயே, தனது பதவியேற்பிற்கு முன் பணயக் கைதிகளை விடுதலை செய்யவில்லையென்றால் நரக விலை கொடுக்க நேரிடும் என்று ஹமாஸ் அமைப்பிற்கு டொனால்ட் ட்ரம்ப் கெடு விதித்துள்ளார்.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# 13 ஆவது திருத்தமும் உண்மையான குற்றவாளிகளும்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவான அதிகாரப்பரவலாக்கத்திற்கான 13 ஆவது திருத்தச் சட்டமும் பதவிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசாங்கங்களினாலும் பேசுபொருளாக இருக்கின்றதே தவிர அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் சிறிதளவேனும் இல்லை என்பது வரலாறு. 13 ஆவது திருத்தச் சட்டத்தை தும்புத் தடியாலும் கூட தொட்டுப்பார்க்க முடியாது என தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் ஆர்.சம்பந்தன் 2007 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

இருந்தாலும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் 13 ஐ அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக நோக்கலாம் என்ற தொனியில் சம்பந்தன் மாத்திரமல்ல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் கூற ஆரம்பித்தன.

13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வல்ல என்று 1988 ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தரப்பு நிராகரித்திருந்தாலும் அவ்வப்போது 13 பற்றிப் பேசிக் கொண்டே இருந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

இதன் காரணமாகவே 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகாவும் அவருடைய அரசாங்கமும் மாகாண சபைகள் முறைகள் பற்றிய பேச்சுக்களைத் தவிர்த்திருந்தன.

13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் ஒரு சரியான நிலைப்பாடு இல்லை. ஆனாலும், 13 தீர்வல்ல என்பதை ஒற்றை வார்த்தையில் வெளிப்படுத்த முடியும். 2009 இற்குப் பின்னர் கொழும்புக்கு வந்து செல்லுகின்ற இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் இந்திய வெளியுறவுச் செயலாளர்கள் ஆகியோரின் வாய்களில் இதமாக மீட்டப்பட்டு வந்த வீணை ஓசை என்னவென்றால், 13 பற்றியதுதான்.

ஆனால், 2024 ஆண்டு நவம்பர் மாதம் பதவிக்கு வந்த அநுர அரசாங்கம் 13 பற்றியே பேசவில்லை. தேசிய மக்கள் சக்தியின் செயல் அணியான ஜேவிபி மாத்திரமே 13 பற்றிப் பேசுகிறது. அதுவும் ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா 13 இல்லாதொழிக்கப்படும் என்ற தொனியை பகிரங்கப்படுத்தியிருக்கிறார்.

ஆனால், புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்படுமானால் மாகாண சபைகள் முறைகள் பற்றிக் கலந்துரையாடப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ செய்தியாளர் மாநாட்டில் கூறியிருக்கிறார். அதேநேரம், மாகாண சபைகளை நீக்குவதற்கான மக்கள் ஆணையைப் பெறவில்லை என்கிறார் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர.

ஆக, மாகாண சபைகள் தொடர்பாக உரிய நிலைப்பாடு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் இல்லை என்பது தெளிவாகிறது. ரில்வின் சில்வாவினுடைய கருத்து ஜேவிபியின் கருத்தா அல்லது தனிப்பட்ட கருத்தா என்று ஆராய்வதை விடவும் மாகாண சபை முறை பற்றிய ஜேவிபியின் நிலைப்பாடு குறிப்பாக அநுரவின் நிலைப்பாடு முக்கியமானது. ஜேவிபியின் தலைவராக இருந்தபோது மாகாண சபைகள் மற்றும் 13 பற்றி அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் எதிரானதாகவே இருந்தன.

அதுமாத்திரமல்ல, மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் எதிர்க் கட்சியாக இருந்தபோது 2018 ஆம் ஆண்டுடன் மாகாண சபைகளின் பதவிக் காலம் நிறைவடைந்திருந்தது. ஆனால், பதவிக்காலம் முடிவடைந்த மாகாண சபைகளை நடத்துமாறு கோரி ஜேவிபி எதிர்ப்புப் போராட்டங்கள் எதனையும் நடத்தவில்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை என்று வலியுறுத்தி எதிர்ப்பு போராட்டம் நடத்திய ஜேவிபி மாகாண சபைகளுக்காக தேர்தல்கள் நடத்தப்படாமை தொடர்பாக பாரிய எதிர்ப்புக்களை காட்டவில்லை.

2020 இல் கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தபோதும் மாகாண சபைகள் பற்றி ஜேவிபி வாய்திறக்கவில்லை. 2017 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகள் திருத்தச் சட்டம் பற்றியும் ஜேவிபி பாரியளவில் கேள்விகளை தொடுக்கவில்லை. எதிர்ப்பும் வெளியிடவில்லை.

இப் பின்னணியில்தான் ஜேவிபியின் முகத் தோற்றமான தேசிய மக்கள் ஆட்சிக்கு வந்துள்ளது. தற்போது மாகாண சபைகள் பற்றி முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை தேசிய மக்கள் சக்தியும் ஜேவிபியும் வெளியிட்டு வருகின்றன.

மாகாண சபைகள் முறைமையை ஒழிப்பதற்கான கூட்டமைப்பு என்ற பெயரில் ஓர் அமைப்பு இலங்கையின் தலைநகர் கொழும்பில் 2013 ஆண்டு யூலை மாதம் உருவாக்கப்பட்டது. பொதுபலசேனா, சிஹல ராவணய ஆகிய அமைப்புக்களும் சில சிங்கள முக்கியஸ்தர்களும் இந்த அமைப்பில் அங்கம் வகித்திருந்தார்கள். மாகாண சபைகள் முறையை உள்ளடக்கிய 13வது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு இந்த அமைப்பு செயற்பட்டிருந்தது.

அரசியல் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு பகிரும் நடைமுறை தோல்வியடைந்துவிட்டதாகச் செய்தியாளர் சந்திப்பில் கூறிய அந்த அமைப்பினர், நிர்வாக அதிகாரங்களே மாகாண சபைகளுக்கு பகிரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

வடமாகாண சபை தேர்தல் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருந்த நிலையில்தான் மேற்படி அமைப்பு உருவாக்கப்பட்டு எதிர்ப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டிருந்தன.

அப்போதிருந்த ஜேவிபியும் வடக்குக் கிழக்கில் நிர்வாக அதிகாரங்களை மாத்திரம் சீர் செய்தால் போதுமென்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது. 2024 இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களின்போதும் மாகாண சபைகள் பற்றி சரியான நிலைப்பாட்டை அனுர எடுத்திருக்கவில்லை.

இப் பின்னணியில் இலங்கை ஒற்றையாட்சியை மேலும் பலப்படுத்த புதிய யாப்பு என்பதும் புதிய யாப்பு உருவாக்கத்தின்போது மாகாண சபைகள் பேசுவோம் என்பதும் வழமையான அரசியல் நாடகமே.

ஆகவே, இதன் பிரதான குற்றவாளிகள் யார் என்றால் தமிழ்த்தேசியக் கட்சிகள்தான். மாகாண சபையும் 13 ஆவது திருத்தமும் தீர்வல்ல எனவும், வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சியும், சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரமுமே உரிய தீர்வாக அமையும் எனவும் ஒருமித்த கருத்தில் பகிரங்கப்படுத்த தமிழ்த் தலைவர்கள் தயங்குகிறார்கள். இதுதான் உண்மை.

# ஆளுமை இழக்கும் இளம் சமுதாயம்

# யார் மீது தவறு ?

**எஸ்.டொரின்**

தகவல் தொடர்பு சாதனங்கள் என்பது கருத்தை அல்லது தகவலினை ஓரிடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு பரிமாற்றம் செய்ய உதவும் கருவிகள் எனக் குறிப்பிடலாம்.

ஆரம்ப காலங்களில் இருந்தது போல ஒருவருடனான பேச்சு, சம்பாசனை, கூட்டங்கூடல் போன்ற வழிமுறைகளினாலான தொடர்பாடல்கள் இன்று அருகிவிட்டன.

அத் தொடர்பாடலினை கருவிகளின் வழி நாம் மேற்கொள்கின்ற போது அவை தொடர்புசாதனங்களாகி விடுகின்றன. அத்தோடு இத் தொடர்புசாதனங்களின் வழி பெறப்படும் தகவல் பரிமாற்றமானது எத்தகைய தடங்களும் இன்றி ஒருவரை சென்றடைகின்ற போது தான் அவை சமூகத்தில் பயனளிக்கின்றன அல்லது முழுமை பெறுகின்றன.

இத் தகவல் தொடர்பு சாதனங்களில் தொலைபேசி, இணையம் என்பன மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் தகவல் பரிமாற்றம் திகழ்கின்றது. இத் தொடர்பாடல் சாதாரண கண்ஜாடை முதல் இணையத்தில் தொடர்பு கொள்வது வரை எந்தவகையிலும் அமையலாம்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி எனும் நிலையில் சமூகத்தின் செல்வாக்கிற்கு உட்படாமல் அவனால் வாழமுடியாது. மொழி பழக்கவழக்கங்கள் ஒழுக்க முறைகள் கருவிகளின் பயன்பாடு ஆகிய அனைத்தையும் அவன் சமூகத்தில் இருந்து பெற்றுக் கொள்கின்றான்.

கையடக்கத் தொலைபேசி நமது சமூகத்தில் எங்கும் நிறைந்திருக்கின்றது. அவைகளுக்கு தடைகள் இல்லை. இன்று பெருகி வரும் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் நினைத்தவுடன் அதே கணத்தில் அழைப்புக்களை மேற்கொள்ளவும், குறுந்தகவல்களை (SMS) அனுப்பவும் பெறவும் முடிகின்றது.

மேலும், விளம்பரங்களாகவும், ஒளி, ஒலி முறைகளிலும் தகவல்களை வெளிக்கொணர்ந்து தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடிகின்றது. இவை இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் சிந்தனையின் மையப் புள்ளியாக விளங்குகின்றது.

அவர்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்களில் பண்பாடு, விழுமியம், நெறிமுறைகள், கலாசார அம்சங்கள், உணவு பழக்க வழக்கங்கள், உறவு முறைகள் என அனைத்து அம்சங்களிலும் பாரிய தாக்கத்தினை செலுத்துவதாக அமைகின்றது.

இன்று பாடசாலை மாணவர்கள் தாமாகவே விரும்பியோ விரும்பாமலோ இக் கையடக்கத் தொலைபேசியின் ஆட்சிக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு நேரத்தினை கடமைகளை மறந்து செயற்படுகின்ற அளவுக்கு சமூகத்தில் இதன் ஆக்கிரமிப்பு அதிகரித்து விட்டது. இவ்வாறு அவர்களின் வாழ்வியல் அம்சங்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக இன்று விமர்சிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களின் நேரம் வீண் விரயம் செய்யப்படுவதுடன் கற்றலின் பெறுமதி தேவையின், இலக்கின் முக்கியத்துவம் குறைக்கப்படுகின்றது.

இவர்களிடையே சமூக அக்கறை பற்றிய சிந்தனைகள் இல்லாது போவதுடன் தமது பொறுப்புக்கள், கடமைகள், எதிர்கால திட்டங்கள் பற்றி சிந்திக்கும் தன்மை முதலானவை கையடக்கத் தொலைபேசி பாவனையால் குறைந்துள்ளது.

அறிமுகமானவர்கள், உறவினர்கள், நண்பர்களுடன் உரையாடுவது போதாதென்று முகம் தெரியாதவர்களுடன் கூட தொடர்பு வைத்திருப்பதால் தவறான பாதையை தேர்ந்தெடுக்கவும், கலாசார பண்பாட்டு சீர்கேடுகள் ஏற்படவும், உறவுகளுக்கு இடையில் புறக்கணிப்புக்கள், உளப்பாதிப்புக்கள், என்பனவும் ஏற்படுகின்றன.

மேலும், வன்முறை மனப்பாங்குகளும் வளர்கின்றன. குற்றச்செயல்களும் இதனால் அதிகரிக்கின்றன.

அதாவது, கையடக்கத் தொலைபேசியை வைத்திருப்பது கௌரவமாக இவர்கள் மத்தியில் காணப்படுவதால் அதனை திருடுவதற்கும் இவர்கள் பின்நிற்பதில்லை. மேலும், கையடக்கத் தொலைபேசி கணக்கை மீள்நிரப்ப (Reload or Recharges) செய்ய வீட்டில் பணம் கொடுக்காத சந்தர்ப்பத்தில் வீட்டிலேயே திருடுகின்ற தன்மையும் இவர்களிடம் அதிகரிப்பதனால் பல சிறிய குற்றங்களை இலகுவாக செய்ய கற்றுக்கொள்கின்றனர்.

எனவே, மேற்குறிப்பிட்ட வகையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கையடக்கத் தொலைபேசி அவர்களது வாழ்வியல் அம்சங்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தவதனை அறியமுடிகின்றது. இன்றைய நிலையில் கையடக்கத் தொலைபேசி பாவனை உலகளாவிய ரீதியில் பரந்துபட்டவிடயமாக காணப்படுகின்றது.





பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து, பாதுகாப்பு கருதி அவர்களுக்கு பெற்றோர்களால் அளிக்கப்படும் கையடக்கத் தொலைபேசியே அவர்களை பல சமூக பிரச்சினைகளை எதிர்நோக்க வழி வகுக்கின்றது.

MP3 Songs, Video Games என பல தரப்பட்ட விடயங்களால் கவரப்பட்ட மாணவர்கள் மணிக்கணக்காக தங்கள் பெரும் பொழுதை இதில் கழிக்கின்றனர்.

மேலும், கொரோனா தொற்றுநோய் காலத்தில் பாடசாலை மாணவர்கள் முழுமையாக கைத்தொலைபேசிக்கு அடிமையாகிவிட்டார்கள் என்றே கூறவேண்டும். காரணம், அவர்களுக்கு பாடசாலையும் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. தொடர்ந்து சில வகுப்பு மாணவர்களுக்கு சூம் வகுப்பு மூலமே வகுப்புகள் இடம்பெற்றன.

இவ்வாறான சூழ்நிலையில் மாணவர்கள் கையடக்கதொலைபேசியுடன் தங்களின் பொழுதை முற்றிலும் கடத்தினர். இவை அவர்கள் தொலைபேசியுடன் நெருக்கமாக அதிக காரணமாக அமைந்தது.

தேவைக்கென பாவிக்கும் நிலை போய் எந்த நேரமும் கையில் அதை வைத்துக் கொண்டு நேரத்தையும், மன ஆரோக்கியத்தையும் பெருமளவில் பாதிக்கின்றது.

## தொலைபேசியால் பிறழ்வு நடத்தைகள்

இதனால் இதனை தவிர்க்க ஆசிரியர்களும், பெற்றோர்களும் வழிகாட்ட வேண்டும். கண்டிப்பதன் மூலம் எந்தவொரு செயலையும் நாம் தடுத்து விட முடியாது. நல்ல புத்தகங்களை வாசிக்கவும், பெற்றோர், உறவினர்களுடன் நட்புறவாக வளர்வதற்கு எல்லாமே இந்த வழிகாட்டல் அவசியம். இன்று உலகம் முழுவதுமே கையடக்கத் தொலைபேசிகளில் பாடசாலை மாணவ சமூகத்தை தம் கைப்பிடிக்குள் வைத்துள்ளது.

எனவே, அதற்கு அடிமையாகி விடாது திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் கல்வியிலும், ஆளுமை விருத்தியிலும் நல்ல முன்னேற்றத்தை எட்ட முடியும். பாடசாலை நேரங்களில் மாணவர்கள் இதனை பாவிப்பது இனங்காணப்பட்டு இலங்கையில் அனேக பாடசாலைகளில் இதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பாட நேரங்களில் ஆசிரியர்களும் கையடக்கத் தொலைபேசியை பாவிப்பதனை தவிர்ப்பதன் மூலமாக அவர்களுக்கு முன்னோடியாக திகழலாம். மேலும், பாடசாலையை விட்டு திரும்பியவுடன் நண்பர்களுடன் அரட்டை அடிக்க கையடக்கத் தொலைபேசியை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிடுகின்றனர். இவர்கள் இதனை தவிர்த்து கொள்ளல் நன்று.

ஏனெனில், பாடசாலையிலும், தனியார் வகுப்புகளிலும் அவர்களுடன் பேசிவிட்டு தான் வீடு திரும்பியிருப்பார்கள். எனவே, வீட்டுக்கு வந்ததும் மீண்டும் பாடங்களை படிக்கலாம் அல்லது ஓவியம், நடனம், விளையாட்டுகளில் கவனத்தை செலுத்துவதன் மூலம் ஆளுமையை விருத்தியடையச் செய்யலாம்.

இது சமூகத்தில் பகுதியளவில் வேலையை இலகுவாக்குதல், தொடர்பாடலை இலகுவாக்குதல் போன்ற சாதகங்களுக்காக பயன்படுத்தினாலும் இது பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமூக சீர்கேட்டினை தூண்டுகின்றது.


எதிர்காலத்தில் இதன் வளர்ச்சி சமூக நலனை மேம்படுத்தாமல் மாறாக பாதகமான விளைவுகளை எற்படுத்தகின்றது. தகவல் தொடர்புகள் பயன்படுத்த வேண்டியது இன்று பல்வேறு குற்றச் செயல்களுக்கும், ஒழுக்க சீர்கேடுகளுக்கும் துணை போகின்றது.

இதன் பாவனை பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரித்த நிலையில் நாகரீகம் என்ற போர்வையில் கலாசாரத்தினை சீரழிக்கும் தன்மையை கொண்டு காணப்படுகின்றது. இவ்வாறாக பாடசாலை மாணவர்கள் அன்றாட வாழ்வியலில் அம்சங்களில் மிகுந்த பாதிப்பினை பிறழ்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

இது சமூகத்தில் பல பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது என்பதையும் இதன் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது கவனம் தேவை இதனை கவனத்தில் கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி, எதிர்கால நலன் என்பவற்றிக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டும் என்பதுடன் இவ் கையடக்கத் தொலைபேசி மூலமாக தேவையற்ற பாவனையை குறைப்பதனையும், அந்நிலையை மாற்றுவதற்காக அதாவது, அதற்கு அடிமையாகும் தன்மையை மாற்றும் வழிவகைகளை விழிப்புணர்வினை ஏற்படுத்தி தம் பிள்ளைகளை நேரான பாதைக்கு இட்டுச் செல்வது அவசியமானதாகும்.

பாடசாலை மாணவர்களின் ஆளுமை விருத்தியில் அதிக அக்கறையும் மாணவ சமூகத்திற்கு செழிப்பான கல்வி வளம், எதிர்காலம் சிறப்பான முறையில் அமைவதற்கும் இக் கையடக்கத் தொலைபேசி தாக்கத்தில் இருந்து விடுபட சகலரும் சிந்திப்பதும் கடமை உணர்வுடன் செயற்பட வேண்டியதும் அவசியமாகும். ■



# வெள்ளத்தினால் பாதிப்புற்றோருக்கு நிவாரணம்
# ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு

கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளத்தினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, திறைசேரியில் இருந்து அதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் வழங்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கு உடனடியாக தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியும் பணிப்புரை வழங்கியுள் ளதாக தெரிவித்தார்.

நிலவிய சீரற்ற வானிலை காரணமாக 24 மாவட்டங்களில் 139,439 குடும்பங்களை சேர்ந்த 469,872 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும், 18 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

மொத்தம் 12,348 குடும்பங்களை சேர்ந்த 38,616 பேர் 247 பாதுகாப்பான மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அனர்த்தத்தினால் மறைமுகமாக பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த அளவை விட உயர்வாக மதிப்பிடப்படுவதால், அனர்த்த நிவாரணம் மற்றும் அனர்த்தத்தின் பின்னரான நிவாரணங்களை வழங்குவதில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# செவிப்புலனின் உதவியுடன் அல்குர்ஆன் மனனம் செய்தவரின் வீட்டில் ரிஷாட் எம்பி

செவிப்புலனின் உதவியுடன் அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்த, மாவடிப்பள்ளியை சேர்ந்த அல் ஹாபிழ் அப்துல் அமீர் முஹம்மட் அப்துல்லாஹ்வின் வீட்டிற்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஞாயிற்றுக்கிழமை (01) நேரில் சென்று, அவருக்குப் பொன்னாடை போர்த்தி, பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் மற்றும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் டொக்டர் மிக்ரா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் உடனிருந்தனர்.



# வாக்குவாதம் கொலையில் முடிவு

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்)

ஒயாமடுவ நவோதாகம பகுதியில் இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.பேமடுவ பண்டாரம பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இரண்டு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் கூரிய ஆயுதத்தால் இளைஞரை தாக்கி குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் அதே பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஒயாமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவடிப்பள்ளி அனர்த்தம்; சுயாதீன விசாரணை நடத்த வேண்டும்

## நாடாளுமன்றத்தில் ரிஷாட் பதியுதீன்

காரைதீவு – மாவடிப்பள்ளி வீதியில், உழவு இயந்திரம் கவிழ்ந்து, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்த துயர சம்பவம், தொடர்பில் சுயாதீனமான விசாரணையை நடத்த வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் சபையில் வலியுறுத்தினார்.

நேற்று (03) நாடாளுமன்ற அமர்வில், ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து, அவர் மேற்படி விடயத்தினை சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர்,"அம்பாறை மாவட்டத்தில், மாவடிப்பள்ளியில் அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தில் எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களது வீடுகளுக்கு நான் நேற்றுமுன்தினம் (01) விஜயம் செய்திருந்தேன். அப்போது, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் பொலிஸாரின் பொறுப்பற்ற செயற்பட்டினாலேயே இந்தத் துயர சம்பவம் நிகழ்ந்ததாக குற்றஞ்சாட்டி விசனம் வெளியிட்டனர்.

குறிப்பாக, இந்த சம்பவம் இடம்பெற்ற போது, பொலிஸார் கடமையில் இருந்திருக்கிறார்கள். வெள்ளப் பாதிப்பினால், மதரஸா விலிருந்து வெளியேறுவதற்கு வழி இல்லாததன் காரணமாகவே, மதரஸா நிர்வாகம் மாணவர்களை உழவு இயந்திரத்தில் ஏற்றி அனுப்பியிருக்கின்றது.

இவ்வாறு அவர்கள் அந்தப் பாதையில் பயணித்த போது, வீதியில் வெள்ளம் பெருக்கெடுத்திருந்த நிலையில், பொலிஸார் வீதியை மூடாமல், போக்குவரத்துக்கு அனுமதி அளித்தமையானது பொறுப்பற்ற செயற்பாடாகும். அவர்களை தடுத்து நிறுத்தி நிலைமையை விளக்கியிருக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, சம்பவம் இடம்பெற்று சுமார் நான்கு மணித்தியாலயங்களுக்கு பிற்பாடு, கடற்படையினர் வருகை தந்து, அவர்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதுவரைக்கும், பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக, அங்கிருந்தவர்கள் இரண்டு உயிர்களை முயற்சி செய்து காப்பாற்றி இருக்கிறார்கள். இதன்போது, அங்கிருந்த பொதுமக்கள், வெள்ளத்தில் சிக்குண்டவர்களை காப்பாற்றுமாறு பொலிஸாரிடம் கெஞ்சியபோது, பொலிஸ் நிலையத்தில் சென்று முறைப்பாடு செய்யுமாறு பொலி ஸார் தெரிவித்திருகின்றார்கள். பொலிஸ் நிலையத்துக்கு அவர்கள் சென்று, ஒரு மணித்தியாலம் வரை முறைப்பாட்டை செய்வதற்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. ஒரு அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கான துரித பாதுகாப்பு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடாது, இந்த மக்களை இவ்வாறு அங்குமிங்கும் செல்லுமாறு பணித்திருப்பது கவலை தருகின்ற விடயம். எனவே, இந்த சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணை ஒன்றை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் முன்னெடுக்க வேண்டும் என்று, இந்த உயர் சபையில் கோரிக்கை விடுக்கின்றேன்" என்று கூறினார்.

இதற்கு பதில் வழங்கிய சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க,

"மேற்படி, சம்பவம் தொடர்பில் ஏலவே நாம் கலந்துரையாடியுள்ளோம். மேலும், கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் விரிவாக ஆராய எண்ணியுள்ளோம். இந்த விடயம் தொடர்பில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உரிய நடவடிக்கையினை மேற்கொள்வார்" என்று கூறினார்.


# மொனராகலையில் 25 ஆயிரம் பயிரடப்பட்ட கஞ்சா செடிகள் அதிரடிப்படையினரால் அழிப்பு

எஸ்.ஸ்ரீ

மொனராகலையில் சூட்சுமமான முறையில் பயிரிடப்பட்ட இரண்டு கஞ்சா சோனைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கண்டுபிடித்து அழித்துள்ளனர்.

மொனராகலை வலய பொலிஸ் அத்தியட்சகர் குணசிறி தலைமையில் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர தலைமையில் விசேட அதிரடிப்படையின் புத்தள முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி,புத்தள முகாம் அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் மெதகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பான பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே கஞ்சா சேனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பு துப்பரவு செய்யப்பட்டு இருபத்தைந்தாயிரம் கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப் பட்டுள்ளன. 20 கஞ்சா செடிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக மெதகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. ஏனைய கஞ்சா செடிகள் அனைத்தும் சம்பவ இடத்திலேயே எரித்து சம்பராக்கப்பட்டுள்ளன.



# அலங்கார மீன் வளர்ப்பு கண்காட்சி; இராஜகிரிய இந்து வித்தியாலயம் பங்கேற்பு




அலங்கார மீன் வளர்ப்பு திட்டத்தை மாணவர்களிடையே பிரபல்யமடையச் செய்யும் நோக்கில் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை கண்காட்சியொன்றை பொரளை தப்ரபென் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. கண்காட்சியில் இராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர இந்து வித்தியாலய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# யானைக்குட்டியின் சடலம் வயலில் மீட்பு

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்)

ஹொரவப்பொத்தானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட இஹல அங்கு நொச்சிய சியம்பலாகஸ்வெவ வயலில் யானைக்குட்டி யொன்றின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

03 - 04 வயது மதிக்கத்தக்க 05 அடி உயரமுடைய யானைக்குட்டியே உயிரிழந்துள்ளது. குறித்த யானைக்குட்டி வாய் வெடியை உட்கொண்டு உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் பொலிசாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# அஷ்ஷெய்ஹ் முஹம்மத் பாஸி (ரஹ்) 28 வது வருட மஜ்லிஸ் 12ஆம் திகதி

(பேருவளை பீ.எம் முக்தார்)



பேருவளை சீனன் கோட்டை கங்கானம் கொடை நூராணிய்யா ஸாவியா மஸ்ஜிதில் வருடாந்தம் நடைபெற்று வரும் ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னாள் செய்ஹுஸ் ஸஜ்ஜாதா டாக்டர் அஷ்செய்ஹ் முஹம்மத் பாஸி பின் செய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி, அஷ் ஷாதிலி ரலியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் பெயரிலான, 28வது வருட கதமுல் குர்ஆன் மஜ்லிஸ் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறும்.

அஸர் தொழுகையை தொடர்ந்து கதமுல் குர்ஆன் மஜ்லிஸும், மஃரிப் தொழுகையை தொடர்ந்து வலீபா, யாகூதிய்யா, ஹழரா மஜ்லிஸும், இஷா தொழுகையை தொடர்ந்து

முஸாக்கராவும், அதனை தொடர்ந்து துஆவும் இடம் பெறும்.

மேற்படி, ஸாவிய்யா பரிபாலன குழு ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில் கலீபாக்கள், உலமாக்கள், சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர்கள், இஹ்வான்கள் பலரும் கலந்து கொள்வர்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக ஷாது லிய்யா தரீக்காவை பின்பற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் ஞாபகர்த்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# சி ஐ டியின் புதிய பணிப்பாளராக ஐ.எஸ்.முத்துமலா



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (இரகசியப் பொலிஸ்) புதிய பணிப்பாளராக திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிய பெண் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எஸ். முத்துமலா நியமிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை,பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் உட்பட 54 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

5 பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் 35 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்கள் தவிர 7 பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 7 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி , குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். தெஹிதெனிய, நுகேகொட பிரிவுக்கு பொறுப்பாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.டி.கே.எஸ் பெரேரா நியமிக்கப் பட்டுள்ளார்.

# உங்களுக்கு ஒரு நியாயம் எங்களுக்கு வேறு நியாயமா?



பதினைந்து வருடங்களுக்கு முன்னர் அரச பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் பிறந்த தினத்தைக் கொண்டாடிய வடக்கின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ஆளும் கட்சியினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், அநுர குமார திசாநாயக்க அரசாங்கத்தின் கீழ் நவம்பர் 30ஆம் திகதி கைது செய்யப்பட்ட வடக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கத்தை வல்வெட்டித்துறை பொலிஸுக்கு வருமாறு அழைப்பு விடுத்தபோதிலும், தனக்கு உடல்நிலை சரியில்லை என அவர் அறிவித்த நிலையில், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய அதிகாரிகள் அவரது வீட்டுக்குச் சென்று சுமார் ஒரு மணிநேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழீழத் தலைவராகக் கருதப்பட்டதாகவும், அதனால் அவரது பிறந்த தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்ததாகவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம். கே. சிவாஜிலிங்கம் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

"உறவினர் என்ற காரணத்தினால்தான் பிறந்தநாளை அனுஷ்டித்தீர்களா என என்னிடம் கேள்வி எழுப்பினர். உறவினர் என்பதற்கு மேலதிகமாக தமிழ் ஈழத் தலைவராக அவரை கருதுகின்ற காரணத்தினால்தான் அந்த பிறந்த தினத்தை வெகுவிமர்சையாக கொண்டாடியதாக நான் தெரிவித்தேன். ஏன் அவ்வாறு கூறுகின்றீர்கள் என அவர்கள் கேட்டார்கள். தமிழ் ஈழத் தேசியத் தலைவராக இருந்த காரணத்தினால்தான் பிரபாகரனுடன் அன்றைய இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஒரு சமாதான உடன்படிக்கையில் கையெழுத்து இட்டிருந்தார் எனக் குறிப்பிட்டேன்."

2024ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70ஆவது பிறந்ததின நிகழ்வுகள் சிவாஜிலிங்கத்தின் தலைமையில் இடம்பெற்றபோது, அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் புகைப்படத்தை அகற்றி, கொண்டாட்டத்தை மேற்கொள்ளுமாறு அவருக்கு அறிவித்துள்ளனர். இது தொடர்பாகவும் தன்னிடம் விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார்.

"பிறந்தநாளை முன்னிட்டு ஒட்டப்பட்டிருந்த பதாகையில் பிரபாகரனின் புகைப்படத்தை அகற்றுமாறு பொலிஸார் கோரியிருந்தனர். அகற்றிய பின்னர்தான் நிகழ்வு இடம்பெற்றது என்ற விடயத்தையும் கூறியிருந்தேன்."

அரசாங்கத்தின் நடவடிக்கை எதுவாக இருந்தாலும் அதனை எதிர்கொள்ளத் தான் தயார் எனவும் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

"மாவீரர் தின நிகழ்வுகளை செய்ய முடியுமென சொன்னவர்கள் ஒரு புகைப்படத்தை பார்த்து அஞ்சுகிறார்கள் எனின் இது எங்கே செல்கிறது? ரோஹன விஜேவீரவின் புகைப்படத்தைப் பார்த்து மக்கள் அஞ்சுகிறார்கள் எனச் சொன்னால் அதனை நீங்கள் நம்புவீர்களா? உங்களுக்கு ஒரு நியாயம், எங்களுக்கு ஒரு நியாயமா? ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை."

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்துடன் இணைந்து விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாட வருகை தந்திருந்த 10 இளைஞர்கள்

நவம்பர் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை பொலிஸ/க்கு வரவழைக்கப்பட்டதாகவும் அவர்களில் மூவரிடமும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததாகவும் பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழீழவிடுதலைப்புலிகள்அமைப்பின்தலைவரின் புகைப்படத்தை முகநூலில் வெளியிட்டதற்காக கடந்த நவம்பர் 30ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம், இணுவில் மேற்கு, சுன்னாக்கம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மனோகரன் கயந்தரூபன், நேற்றைய தினம் (நவம்பர் 01) யாழ்ப்பாணம் நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை டிசம்பர் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.




## ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை...!

### தெற்கில் கைதுகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பில் பொய்யான பிரசாரம் செய்தமைக்காக சந்தேகத்தின் பேரில் நேற்றைய தினம் (நவம்பர் 01) கொழும்பு கோட்டை கணினி குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அரசியல் மற்றும் சமூக ஊடக செயற்பாட்டாளரான கெலும் ஜயசுமன கொழும்பு அளுத்கடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர் டிசம்பர் 4 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மருதானையைச் சேர்ந்த 45 வயதுடைய கெலும் ஹர்ஷன (டிசம்பர் 2) கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து, சந்தேகநபரை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை கொண்டாடும் வகையில் பிரசாரம் செய்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு கடந்த நவம்பர் 30ஆம் திகதி அறிவித்திருந்தது.

மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் தொடர்பான பழைய காட்சிகளை சமூக வலைதளங்களில் அண்மைய நிகழ்வுகள் போல் பரப்பியதாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பத்தேகமவில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நவம்பர் 30ஆம் திகதி பத்தேகம நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு டிசம்பர் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# கடற்படை தினத்தை இன்று அனுஷ்டிக்கும் இந்தியா

## பாதுகாப்புக்கு தரைப் படை, வான் படை, கடற்படை ஆகிய மூன்றும் முக்கியம்

ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு தரைப் படை, வான் படை, கடற்படை ஆகிய மூன்றும் மிகவும் முக்கியமானது.

அந்த வகையில் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி கடற்படை தினத்தை இந்தியா அனுஷ்டிக்கிறது.

கடற்படையின் முதன்மை நோக்கம் என்னவெனில், நாட்டின் கடல் எல்லைகளைப் பாதுகாப்பது மற்றும் நாட்டின் பிற ஆயுதப் படைகளுடன் இணைந்து, போர் மற்றும் அமைதி காலங்களில் நாட்டின் எல்லைகள் மற்றும் கடல்சார் நலன்களுக்கு எதிரான அச்சுறுத்தல் அல்லது ஆக்கிரமிப்புக்களை தடுத்தல் ஆகும்.

இது அந் நாட்டின் கடற்படையினர் ஆற்றியுள்ள சாதனைகள் மற்றும் பங்களிப்பினை அங்கீகரிப்பதற்காக கொண்டு வரப்பட்ட ஒரு தினமாகும்.

போர்க் கப்பல்கள், மறைவேகப் படகுகள், நீர்மூழ்கிகள், கடல் குண்டுகள், தவளை மனிதர் போன்ற பல தரப்பட்ட தாக்குதல் திறன்களை கடற்படை கொண்டுள்ளது.

1612 ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியால் இந்திய கடற்படை தொடங்கப்பட்டது.

1971 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் திகதி இந்திய கடற்படை PNS கைபர் உட்பட நான்கு பாகிஸ்தான் கப்பல்களை மூழ்கடித்த திரிசூலம் படை நடவடிக்கையின்போது தெரிவு செய்யப்பட்டது.

அதாவது ஒபரேஷன் ட்ரைடென் நடவடிக்கையின் வாயிலாக இத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அத்துடன் இத் தினத்தில் நூற்றுக்கும் அதிகமான பாகிஸ்தான் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டதுடன் இந்திய - பாகிஸ்தான் போரில் உயிரிழந்தவர்களும் நினைவு கூறப்படுகின்றனர்.

நாட்டின் எல்லைகளைப் பாதுத்தல், கூட்டுப் பயிற்சிகள், துறைமுகப் பயணங்கள், பேரிடர் நிவாரம் மற்றும் பலவற்றில் இந்தியாவின் சர்வதேச உறவுகளை மேம்படுத்துவதில் இக் கடற்படை முக்கிய பங்காற்றுகிறது.

1944 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி பிரித்தானிய இந்திய அரச கடற்படை முதல் முதலாக இத் தினத்தைக் கொண்டாடியது.

கடற்படை என்பது முப்பரிமாணத்தில் அதாவது கடலில், கடலின் மேல், கடலின் உள்ளே என மூன்று இடங்களில் இருந்து நாட்டைப் பாதுகாக்கிறது.

ஹரப்பா நாகரிகத்தின்போது கிறிஸ்துவுக்கு முன்பு 2300இல் லோதல் எனும் பழங்கால கப்பல் தளத்திலேயே உலகின் முதல் கப்பல் சரக்குகள் கையாளும் பகுதி கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது.

இச் சிறப்பு தினத்தில் போர்களில் உயிர்தியாகம் செய்வதர்களுக்கு கண்டிப்பாக அஞ்சலி செலுத்தப்படும்.





## மன்னார் மாவட்டத்தில்
# 7500 ஹெக்டேயர் பயிர்ச்செய்கை நாசம்

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் கன மழை காரணமாகவும் 7603 ஹெக்டேயர் விவசாய செய்கை அழிவடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட கமநல சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் இலுப்பைகடவை கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட 1100 ஹெக்டேயர் விவசாய நிலங்களும் மாந்தை பகுதியில் 1168, நானாட்டான் பகுதியில் 768 ஹெக்டேயருமாக ஒட்டு மொத்தமாக 7603 ஹெக்டேயர் விவசாய செய்கை அழிவடைந்துள்ளன இம்முறை மன்னார் மாவட்டத்தில் காலபோக செய்கைக்கு என 11776 ஹெக்டேயர் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 4173 ஹெக்டேயர் விவசாய செய்கை மாத்திரம் தற்போது பகுதி அளவில் காப்பாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இம்முறை விவசாய செய்கைக்காக பல விவசாயிகள் அரச மற்றும் தனியார் வங்கிகளிலும்,கிராம மட்ட அமைப்புகளிடமும் கடன்களை பெற்றுள்ள நிலையில் அவற்றை மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கத்தினை தள்ளுபடி செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டாலே அடுத்த நிலைக்கு செல்ல முடியும்

## இயக்குனர் செல்வராசா தனுசன் தெரிவிப்பு




ஈழத்து கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலமே கலைஞர்கள் அடுத்த நிலைக்கு செல்ல முடியும் என ஈழத்து குறுந்திரைப்பட இயக்குனர் செல்வராசா தனுசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தோல்வி நிலையென நினைத்தால்“ எனும் குறுந்திரைப்படத்தை தயாரித்து ஈகிள் ஸ்ரூடியோ (Eagle studio) எனும் யூரியூப் தளத்தில் வெளியிட்டிருக்கின்றோம். அதனை நீங்கள் பார்க்க முடியும்.

இக் குறுந்திரைப்படத்தில் அதிக ஈழத்து கலைஞர்கள் நடித்திருக்கிறார்கள். ஈழத்தில் பிரசித்திபெற்ற நடிகர்களும் இணைந்து நடித்திருக்கிறார்கள் ஈழத்தில் வெளியிடும் திரைப்படம் ஆகையால் எமது ஈழத்து கலைஞர்களை அனைவரும் குறுந்திரைப்படத்தினை பார்த்து ஊக்கிவிக்க வேண்டும். ஊக்குவிப்பதன் மூலமே கலைஞர்கள் அடுத்த கட்ட முழுநீள திரைப்படம் நோக்கி நகர முடியும்.

இந்த படத்தினை அனைவரும் பாருங்கள் உங்களுக்கு பிடித்திருந்தால் எமக்கு முழு ஆதரவை தாருங்கள். தொடர்ந்தும் நாம் ஈழத்து சினிமாவை வளர்ப்பதற்கு தயாராக இருக்கின்றோம்.

மக்கள் அனைவரும் இந்த குறும்படத்தினை பார்த்து உங்கள் விமர்சனங்களை கூறவேண்டும். அது தான் எமது அடுத்த கட்ட நகர்வுக்கு உறுதுணையாக இருக்கும் என்றார்.

# கிணற்றில் விழுந்து பூசகர் உயிரிழப்பு

கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த போது தவறி விழுந்த பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.இச் சம்பவம் சுதுமலை தெற்கு, மானிப்பாய் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மகாலிங்கம் கருணாகரன் (வயது -52) என்பவரே உயிரிழந்தவராவார்.

இணுவில் ஞான வைரவர் கோவில் பூசகரான இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) மரணச் சடங்கு ஒன்றுக்கு சென்று விட்டு வீடு திரும்பி கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது கிணற்றில் தவறி விழுந்துள்ளார். சடலமாக மீட்கப்பட்ட அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் (02) யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிசார் நெறிப்படுத்தினர். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## இடைத்தங்கல் முகாமில் உணவு வழங்கவில்லை
# கிராம சேவகருடன் முரண்பட்ட இருவருக்கு விளக்கமறியல்

வடமராட்சியில் இடைத்தங்கல் முகாமில் உணவு வழங்கவில்லை என கிராம அலுவலகருடன் முரண்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. வடமராட்சி, கற்கோவளம் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைத்திருந்த சில குடும்பங்களுக்கு உணவு வழங்க மறுத்தார் என கிராம அலுவலகருடன் முரண்பட்ட குற்றத்தில் ஞாயிற்றுக்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இருவரையும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. அதேவேளை, கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு பயணிகள் பல மணிநேரம் காத்திருப்பு

## வடதாரகை பயணிகள் படகில் இயந்திர கோளாறு




நெடுந்தீவுக்கான வடதாரகை பயணிகள் படகில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக நேற்று முன்தினம் (02) மக்கள் குறிகாட்டுவானில் பல மணி நேரம் காத்திருந்ததாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறிகாட்டுவானில் இருந்து நேற்று முன்தினம் மாலை 4:00 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்க வேண்டிய வடதாரகை கோளாறு காரணமாக சுமார் மூண்டரை மணித்தியாலங்கள் குறிகாட்டுவானில் தரித்திருந்தன.

இதனால் நெடுந்தீவு செல்ல முடியாமல் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என நூற்றுக்கணக்கானோர் இரவு 7.20 வரை கடும் குளிரில் குறிகாட்டுவான் இறங்குதுறையில் காத்திருந்துள்ளனர். அடிக்கடி ஏற்படும் இயந்திர கோளாறால் வடதாரகை மற்றும் படகுகளினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக நெடுந்தீவு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை திருத்தப் பணிகள் செய்வது பயனளிக்காத நிலையில் வடதாரகை சேவை நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நெடுந்தீவில் இருந்து குமுதினிப் படகு வரவழைக்கப்பட்டு பயணிகள் அனைவரும் பத்திரமாக நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் நெடுந்தீவைச் சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வவுனியாவில் அரச-தனியார் பஸ் தரப்புக்கிடையில் முறுகல்

## நேரக் கணிப்பாளர் மீது தாக்குதல்



வவுனியாவில் அரச -தனியார் பஸ் தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் பஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்துச் சபையின் நேரக் கணிப்பாளர் மீது தாக்குதல் நடத்தியதில் அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரச -தனியார் பஸ் தரப்பினருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டமையால் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று (03) காலை அமைதியின்மை ஏற்பட்டதாக தெரியவருகின்றது. வவுனியாவில் இருந்து கல்முனை நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த அரச பஸ் தரப்புக்கும், தனியார் பஸ் தரப்புக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அரச பஸ் புறப்படுகின்ற நேரம் தொடர்பிலேயே இந்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் பஸ் நிலையத்தில் இரு தரப்பிற்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிசார் நிலைமையை கட்டுப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிசார் முன்னெடுத்து வருவதுடன், அரச பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை நகரில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு



பருத்தித்துறை நகரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழை காரணமாக பல்வேறு இடங்களில் தற்போதும் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதையடுத்து டெங்கு நோய் பரவும் அபாய நிலை காணப்படுகிறது. இதையடுத்து யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் டெங்கு நோய் தடுப்பு பிரிவினரால் பருத்தித்துறை நகரில் நேற்று (03) டெங்கு ஒழிப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது பருத்தித்துறை நகர் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் மற்றும் அவற்றுடன் அமைந்திருக்கும் காணிகள், கிணறுகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டு, நுளம்பு குடம்பிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டதுடன் மழை நீர் தேங்கி நிற்கும் வகையில் சுற்றுச்சூழலை வைத்துள்ள உரிமையாளர்களுக்கு அவற்றை சுத்தம் செய்யுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட வயல்களில் நோய்த்தாக்கத்தால் பயிர்கள் சேதம்

## பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் வயல்களில் கபிலநிறத்தத்தி மற்றும் மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கம் ஆகியவற்றின் அதிகரிப்பினை கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் சோதிலட்சுமி விஜயதாசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் விவசாய திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த காலங்களிலும் குறித்த நோயின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டதுடன் கடந்த சில தினங்களாக மழையுடன் கூடிய காலநிலையால் குறித்த நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

புளியம்பொக்கணை, பளை, முரசுமோட்டை, பெரிய பரந்தன் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு காணப்படுகிறது. விவசாயிகள் விவசாய போதனாசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் அவற்றை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தார். மேலும் வெள்ள அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட வயல் நிலங்கள் மற்றும் சிறுதானியம், மரக்கறி செய்கைகளின் அழிவு விபரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

### மாகாண சபை முறைமை நீக்கம் தொடர்பில்

# மக்கள் ஆணை எதுவும் பெறப்படவில்லை





"தேசிய மக்கள் சக்தியால் மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணை எதுவும் பெறப்படவில்லை எனவும் இதுவரை மாகாண சபையை நீக்குவதற்கான எந்தவிதமான முன்மொழிவுகளும் முன்வைக்கப்படவில்லை எனவும் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சரும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜஸ்டினா முரளிதரனின் ஒருங்கிணைப்பில் மாவட்ட செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரான பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர ஊடகங்களிடம் தெரிவிக்கும் போதே இதனை சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

1978 அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ரில்வின் சில்வா கருத்துத் தெரிவித்துள்ளார். அதாவது இந்த அரசமைப்பை மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது என்று அவர் கூறியுள்ளார். மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணை எதுவும் பெறப்படவில்லை. இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் அதில் குறிப்பிட்ட விடயம் இந்த மாகாண சபை அலகு போதியதல்ல, எனவே, இந்த விடயத்தில் ஒரு தீர்வை நோக்கிப் போக வேண்டும். அது மாத்திரமல்ல, புதிய அரசியல் யாப்பை முன்வைக்கும்போது 13 ஆம் திருத்தச் சட்டம் அல்ல. முதலாவது திருத்தம் தொடக்கம் 20 வரையிலான திருத்தங்கள் மாற்றப்பட்டு ஒரு புதிய அரசியல் அமைப்பு முன்வைக்கப்படவுள்ளது. இந்த விடயம் பிழையாகப் புரிந்துகொள்ளப்பட்ட விடயமாக நாங்கள் பார்க்கின்றோம். ஆகவே, தேசிய மக்கள் சக்தியால் மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணை எதுவும் பெறப்படவில்லை. அதற்கான முயற்சியில் தேசிய மக்கள் சக்தி ஈடுபடவும் இல்லை. ஆனால், மாகாண சபையையும் விட ஒரு வலிமையான சபை – அனைத்து மக்களுக்கும் சமமான அந்தஸ்தை வழங்கக்கூடிய கூடிய ஓர் அரசியலமைப்பு தேவை. அதில் மாகாண சபை இருக்குமா, இல்லையா என்பதே விடயம். எனவே, இதுவரையும் மாகாண சபையை நீக்குவதற்கான எந்தவிதமான முன்மொழிவுகளும் முன்வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# கிழக்கில் சகல வீதித் தடைகளும் அகற்றப்பட்டு சுமுக போக்குவரத்து

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டிருந்த சகல பொலிஸ், இராணுவ வீதித்தடைகளும் அகற்றப்பட்டு தற்போது சுமுகமான போக்குவரத்திற்கு வழியேற்படுத்தப்பட்டுள்ளமை குறித்து மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, பாலமுனை, நிந்தவூர் – அட்டப்பள்ளம், அம்பாறை, வட்டினாகல ஆகிய பிரதேசங்களில் உள்ள சகல வீதித்தடைகளும் அகற்றப்பட்டுள்ளன.

இதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியகல்லாறு, ஆரையம்பதி, வெருகல், பனிச்சங்கேணி, ரிதிதென்ன ஆகிய பிரதேசங்களின் வீதித்தடைகள் அகற்றப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், சேருநுவர, உப்புவெளி, குச்சவெளி பொலிஸ் தடைகள் யாவும் அகற்றப்பட்டுள்ளன.

# கல்லடியில் இரத்ததான முகாம்






மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க "மனித உயிர் அரியது அதை காக்கும் இரத்தம் பெரியது இரத்த தானம் செய்வோம் உயிரைக் காப்போம்" எனும் கருப்பொருளில் இரத்ததான முகாமொன்று மட்டக்களப்பு கல்லடியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவுகின்ற இரத்தப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுடன் இணைந்து இரத்ததான முகாமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் உத்தியோகத்தர்கள், கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், கல்லடி டச்பார் பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன், அதிகளவிலான இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் இரத்தக் கொடையினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வானியல் ஆராய்ச்சி சாதனை படைத்த அமாசிர் அமானத்





(காத்தான்குடி நிருபர்)

14 வயதில் வானியல் தொடர்பாக மிகக் கடினமான தலைப்புகளில் புத்தகங்கள் எழுதி சாதனை படைத்த காத்தான்குடியைச் சேர்ந்த அமாசிர் அமானத் என்ற மாணவனுக்கு உலக சாதனை விருது வழங்கி வைக்கப்பட்டது.

14 வயது 9 மாதங்கள் வயதுடைய காத்தான்குடி அல்–ஹிறா மகா வித்தியாலயகத்தைச் சேர்ந்த அமாசிர் அமானத் என்ற மாணவன் வானியல் ஆராய்ச்சி தொடர்பாக மிகக் கடினமான தலைப்புக்களில் மூன்று புத்தகங்களை எழுதி சாதனை படைத்தமைக்காக சோழன் உலக சாதனை விருது இந்த மாணவனுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாவட்ட தலைவர் கதிரவன் ட. இன்பராஜா தலைமையில் காத்தான்குடி அல்–ஹிறா மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்த மாணவனுக்கு உலக சாதனை விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பிலக் கோல், டார்க் மேட்டர், இனிசி ஏசன் ரிலேடிவ் ஐன்ட் ஸ்டைன் புவியீர்ப்பு விசை தொடர்பான புத்தகங்களை எழுதியமைக்காகவே இச்சாதனை விருது வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் காத்தான்குடி அல்–ஹிறா மகா வித்தியாலய அதிபர் எம்.பீ.எம். றபீக் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையின் அத்தியட்சகர் டாக்டர் ஜாபீர் உள்ளிட்ட பல்துறைசார் முக்கியஸ்தர்கள். பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

### சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு

# கல்முனையில் நடைபவனியும் விழிப்புணர்வு செயலமர்வும்






(றியாஸ் ஆதம்)

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய பாலியல் எயிட்ஸ் தடுப்பு பிரிவு ஏற்பாடு செய்த நடைபவனியும் விழிப்புணர்வு செயலமர்வும் நேற்றுமுன்தினம் திங்கட்கிமை (02) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்திய பாலியல் எயிட்ஸ் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எல்.ஜலால்டீனால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட குறித்த நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது. "உரிமைப் பாதையில் செல்" எனும் தொனிப்பொருளில் இந்நிழ்வில் வைத்திய அத்தியட்சகர்கள், பிரதேச செயலாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய பிரிவுத் தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், மாவட்ட எயிட்ஸ் குழு உறுப்பினர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர். இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸடீன், பிராந்திய பாலியல் எயிட்ஸ் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எல்.ஜலால்டீன், சம்மாந்துறை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி ஆகியோர் விரிவுரையாற்றினர். சர்வதேச எயிட்ஸ் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 1ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் எயிட்ஸ் நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கவும் அதனால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையிலும் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆற்றுவாழைகள் நிரம்பியுள்ளதால் மீனவர்கள் அவதி



அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீரை வெளியேற்றும் முயற்சியில் கடலை அண்டிய தோணாக்கள் தோண்டிய பகுதிகளில் ஆற்றுவாழைகள் எனப்படும் ஒரு வகையான தாவரங்கள் நிரம்பிக் காணப்படுவதனால் மீனவர்கள் பெருஞ் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக வடக்கு–கிழக்கு ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தம் காரணமாக திறந்து விடப்பட்ட குளங்கள் மற்றும் ஆறுகளில் இருந்து இவ்வாறான தாவரங்கள் கடலுடன் சங்கமித்திருப்பதாக மீனவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்கரையில் கரையொதுங்கிய ஆற்றுவாழை மற்றும் ஆகாய தாமரை போன்ற சல்லு தாவரங்களால் கரைவலை மற்றும் ஆழ்கடல் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர கடற்கரை பகுதியில் இவ்வாறான தாவரங்கள் அதிகமாக காணப்படுவதனால் மீன்பிடித் தொழிலினை மேற்கொள்ளும் மீனவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இத்தாவரங்களில் உயிரை கொல்லும் நச்சுப் பாம்புகளும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் கவனமின்றி செயற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் கரையோதுங்கி காணப்படுகின்ற இத்தாவரங்களில் ஏரிகள் மற்றும் குளங்களில் காணப்படுகின்ற பாம்பு போன்ற விஷ ஜந்துக்களும் மக்கள் வாழ்விடங்களை நோக்கி வருகின்ற ஒரு துர்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

# வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப்பொதிகள்

(வி.சுகிர்தகுமார்)

அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்ததினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினர் மனிதாபிமான உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இவர்கள் , வெள்ள அனர்த்தம் இடம்பெற்ற இடங்களுக்குச் சென்று மக்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைத்தனர்.

இதற்கமைவாக அக்கரைப்பற்று இராணுவ முகாமின் 241ஆம் படைப்பரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் டானிக பத்திரரெட்ணவின் முயற்சியின் பயனாக நேற்றைய தினம் (03) ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் அலிக்கம்பை மற்றும் ஆலையடிவேம்பு போன்ற பிரிவுகளுக்கான உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைத்தனர்.

மேஜர் ஜானக சுபசிங்கவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற உலர் உணவுகள் வழங்கும் நிகழ்வில், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர். திரவியராஜ் கலந்து கொண்டு பொதிகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.இதன் பின்னராக இராணுவத்தினருக்கும் பெற்றுக்கொடுத்தவர்களுக்கும் நன்றி கூறினார்.

# இந்தோனேசிய பிரஜைகள் 8பேர் நுவரெலியாவில் கைது

விமான பயணச்சீட்டு மற்றும் செல்லப்படியாகும் வீசா இன்றி நுவரெலியா பள்ளிவாசல் ஒன்றில் தங்கியிருந்த 08 இந்தோனேசிய பிரஜைகள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


நுவரெலியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பள்ளிவாசலுக்கு சென்று சோதனையிட்டதில் 8 இந்தோனேசிய பிரஜைகளை கைது செய்து விசாரித்த போது இரண்டு மாதங்களுக்கு முன்னர் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்தது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்படும் போது அவர்களிடம் கடவுச்சீட்டு மற்றும் செல்லுப்படியாகும் வீசாக்கள் இல்லை எனவும், விசாக்கள் காலாவதியாகிவிட்டதால், புதுப்பிப்பதற்காக அனைத்து ஆவணங்களையும் இலங்கையில் உள்ள இந்தோனேசிய தூதுவராலயத்தில் ஒப்படைத்துள்ளதாக சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர் .

கைது செய்யப்பட்ட 8 சந்தேக நபர்களும் நுவரெலியாவிற்கு வருவதற்கு முன்னர் ஹட்டன் மற்றும் நாவலப்பிட்டி பகுதிகளுக்கு சுற்றுலா சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

25-65 வயதுக்குட்பட்ட மேலும் 191 பேர் இலங்கைக்கு வந்துள்ளதாகவும் அவர்கள் தீவின் பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுலா சென்றுள்ளதாகவும் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

# கிருஷ்ணன் கலைச்செல்வி எம்.பிக்கு வரவேற்பு



தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச் செல்விக்கு பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் தோட்ட மக்கள் அமோக வரவேற்பளித்தனர். இந்த நிகழ்வு நேற்று முன்தினம் பொகவந்தலாவ



கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

(படங்கள் : பொகவந்தலாவ நிருபர் எஸ் சதீஸ்)

# காலாவதியான 3 தொன் கொள்ளு களனியில் கைப்பற்றல்



களனி பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் பாவனைக்குதவாத 3 தொன் கொள்ளு கைப்பற்றப்பட்டுள்ளது.

10 இலட்சம் ரூபாவிற்கும் அதிகம் பெறுமதியான மூன்று தொன் கொள்ளு பொதியிடப்பட்ட திகதி மற்றும் காலாவதியாகும் காலம் குறித்து எவ்வித தகவலும் பொறிக்கப்படாத 3 தொன் கொள்ளு கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொள்ளு கையிருப்பில் தலா 30 கிலோ எடை கொண்ட 100 பொதிகளும் வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு காலாவதியான பொருட்கள் தொடர்பான தகவல்களை 1977 என்ற குறுகிய தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு வர்த்தக சமூகம் மற்றும் நுகர்வோர்கள் கேட்டுக்கொள்ளப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# இலங்கை தேசிய சமாதான பேரவையின் பயிற்சிப்பட்டறை






(ஆ.ரமேஸ்)

இலங்கை தேசிய சமாதான பேரவை "நல்லிணக்கம்,உள்வாங்கல் மற்றும் ஓரங்கட்டப்படல் தொடர்பாக ஆய்வு முறைகள்" எனும் தொனிப் பொருளில் ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நுவரெலியாவில் திங்கட்கிழமை (02) நடைபெற்றது. நுவரெலியா சம்பத் விடுதியில் நடத்தப்பட்ட இந்த பயிற்சிப்பட்டறையில் சர்வமத குருமார்கள்,அரச திணைக்கள உத்தியோகஸ்தர்கள், சமூக நலம் சார்ந்த அமைப்பினர்,புத்திஜீவிகள்,இளைஞர்கள், பெண்கள் அமைப்பினர் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்துக்கொண்டு பயிற்சி பெற்று கொண்டனர்.

அத்துடன் இப் பயிற்சிப்பட்டறையில் இனங்களுக்கிடையில் நேரடி வன்முறைகள்,கலாசார ரீதியான வன்முறைகள்,மதங்கள் தொடர்பான கரிசனைகள் தொடர்பாகவும் நல்லிணக்கம் தொடர்பாகவும் வெளிப்படையான கலந்துரையாடல்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தலவாக்கலை சாய் சேவா மத்திய நிலையத்தில் சிறப்பு பூஜைகள்







(பி.கேதீஸ்)

பகவான் சத்திய சாய் பாபாவின் 99 ஆவது ஜனன தினத்தையொட்டி தலவாக்கலை சாய் சேவா மத்திய நிலையத்தினால் சிறப்பு பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் தலவாக்கலை சாய் சேவா மத்திய நிலையத்தின் தலைவர் எம்.மகேஸ்வரன் தலைமையில் தலவாக்கலை ஆர்த்தி மஹால் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலவாக்கலை சாய் சேவா மத்திய நிலையத்தின் செயலாளர் இளங்கோவன், முன்னாள் தலவாக்கலை லிந்துலை நகரசபை தலைவர் அசோக சேபால மற்றும் சாய் பக்தர்கள் கலந்துக் கொண்டனர்.

## மட்டு.காத்தான்குடி

# திடீர் சுற்றிவளைப்பில் 20 சந்தேக நபர்கள் கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 20 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது நான்கு பேர் கேரளா கஞ்சாவுடனும் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 250 லீற்றர் கசிப்புடன் 15 பேருமாக 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி, புதிய காத்தான்குடி, ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், தாழங்குடா, கல்லடி, நாவற்குடா உட்பட பகுதிகளிலேயே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (03) ஆஜர் படுத்தப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

## நெடுந்தீவில் கைது செய்யப்பட்ட

# இந்திய மீனவர்கள் 23 பேரும் நிபந்தனையுடன் விடுதலை



நெடுந்தீவு கடற்பரப்பிற்கு அண்மையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த மாதம் 10 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர்.

இந்திய மீனவர்கள் 23 பேரும் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் சிறைச்சாலை அதிகாரிகளினால் நீதிவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிவான் இந்திய மீனவர்கள் 23 பேருக்கும் 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்ததுடன் குறித்த 23 பேரில் 3 பேர் படகோட்டிகள் என்ற வகையில் அவர்களுக்கு தலா 40 இலட்சம் ரூபா அபராத தொகையினை செலுத்தும் அதேவேளை 6 மாத சிறைத்தண்டனையும் மேலதிகமாக வழங்கி உத்தரவிட்டார்.

இதேவேளை, அபராத தொகை செலுத்த தவறின் 6 மாதங்கள் சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக 3 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

# மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய நேரத்தில் நிவாரணம் வழங்க வேண்டியுள்ளது



அரசு பொறுப்பேற்றதுடன் மக்களுக்கு நிறைய அபிவிருத்தி வேலைகளை செய்ய வேண்டும் என்ற அபிலாசையில் இருந்து வருகின்றது.

தற்பொழுதுள்ள காலநிலை மாற்றம் காரணமாக எமது மக்கள் வெள்ளத்தினால் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். இதனால் இவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய கட்டாயத்துக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம் என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் வெள்ளப்பெருக்கால் பாதிப்படைந்து தொடர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் பாதுகாப்பு மையங்களில் தங்கி வாழும் மக்களை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையிலான குழுவினர் சந்தித்தித்து அத்தியாவசிய பொருட்களை வழங்கி வைத்தனர்.

இதன் போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அவர் பாதிப்படைந்துள்ள மக்களின் வாழ்வை நாம் மீளக் கட்டியெழுப்ப வேண்டும். அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் இதற்கு துணைபுரிய வேண்டிய அவசியம் உண்டு.

பாதிப்படைந்துள்ள நீங்கள் மீளக்குடியேற பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம் மற்றும் அனைத்து அமைச்சுக்களும் ஒன்றிணைந்து செயல்பட இருக்கின்றோம்.

பாதைகள் உங்கள் இல்லங்கள் மற்றும் உங்கள் அன்றாட உணவு விடயங்கள், சுகாதார தேவைகள் போன்றவற்றில் இந்த அரசு கவனம் செலுத்தி தீவிரமாக செயற்படுத்தி வருகின்றது. இதேவேளை, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஊடாக சுகாதார தேவைகள் உணவு பொதிகள் வழங்கப்படுவதுடன் ஏனைய நிவாரணங்களும் வழங்கப்படுகின்றன. பெண்களுக்கு சிறுவர்களுக்கு தேவையான சுகாதார தேவைகளையும் கண்காணித்து பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சும் இதற்கு துணையாக ஜெயிக்கா நிறுவனம் , சாக் நிறுவனம் மற்றும் யு.என்.டி.பி நிறுவனங்கள் உதவி புரிகின்றன. இதை வழங்குவதற்காகவே நாங்கள் மன்னாருக்கு வருகை தந்து செயற்படுத்துகின்றோம்- என்றார்.

# அடம்மன பிரதேசத்தில் வாகன விபத்தில் பெண் பலி

புத்தளம் - பல்லம , அடம்மன பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (2) இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாதம்பை, தனிமெல்கம பகுதியைச் சேர்ந்த ஏ.இந்திரா (வயது 30) எனும் திருமணமான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது கணவரான 32 வயதுடைய நபர் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என பல்லம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தம்பதியினர் ஆனமடுவ, ஊரியாவ பகுதியில் மரண வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டு, மீண்டும் மாதம்பை பகுதியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது, குறித்த கணவனும், மனைவியும் பயணித்த மோட்டார் சைக்கிளும், சிலாபத்தில் இருந்து ஆனமடுவ பகுதியை நோக்கி சென்றுகொண்டிருந்த கெப் வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்து தொடர்பில் பல்லம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சபரிமலை பக்தர்கள் வனப்பகுதி வழியாக செல்ல முற்றாக தடை



## கேரள உயர்நீதிமன்றம் உத்தரவு

திருவனந்தபுரம் சபரிமலையில் தொடர்ந்தும் பலத்த மழை பெய்து வருவதால் பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சபரிமலையில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வந்தது. ஆனால் கடந்த இரு நாட்களில் மட்டும் 1.30 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இந்த வருட மண்டல காலத்தில் கடந்த 18 நாட்களில் 12.75 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக சபரிமலையில் பலத்த மழை பெய்து வருவதால் பம்பை உட்பட அனைத்து ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பக்தர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் பம்பை ஆற்றில் குளிக்க தடை விதிக்கப்பட்டது. பின்னர் வெள்ளம் குறைந்ததால் இந்தத் தடை நீக்கப்பட்டது.

குமுளியிலிருந்து முக்குழி, சத்ரம் வனப்பகுதி வழியாக பக்தர்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் நீர் நிலைகளில் கவனமாக இறங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் சபரிமலையில் பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பை ஏற்படுத்த கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிபதிகள் அடங்கிய தேவசம் போர்டு பெஞ்ச், “சபரிமலையில் பலத்த மழை பெய்து வருவதால் பக்தர்களின் பாதுகாப்பை தேவசம் போர்டு உறுதி செய்ய வேண்டும். என்னென்ன கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து பத்திரிகைகள் மூலம் தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தெரிவித்துள்ளது.

நாள் முழுவதும் தொடர்ந்து மழை பெய்தபோதிலும் அதனை பொருட்படுத்தாமல் பம்பையிலிருந்து மலையேறி வரிசையில் காத்திருந்து கடந்த திங்கட்கிழமை இரவு நடை சாத்தும் வரை 80 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் தரிசனம் செய்தனர். கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணிக்குள் 71,922 பக்தர்கள் தரிசனம்செய்துதிரும்பினர். அதிகபட்சமாக தினசரி 80 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் நிலையில் கடந்த திங்கட்கிழமை பலத்த மழையிலும் அதைவிட அதிகமாக பக்தர்கள் தரிசனம் செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் குமுளியில் இருந்து முக்குழி, சத்ரம் வழியாக நடந்து செல்கின்றனர். இது வனப்பகுதி ஆகும். மண்டல, மகரவிளக்கு காலங்களில் மட்டுமே இந்த வனப்பாதை வழியாக பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள். அதுவும் பகலில் மட்டுமே இந்த வழியாக செல்ல அனுமதி உண்டு. இந்தநிலையில் தொடர்ந்தும் பலத்த மழை பெய்து வருவதால் இந்த வனப்பாதை வழியாக பக்தர்கள் செல்ல தடை விதித்து இடுக்கி மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். அடுத்த உத்தரவு வரும் வரை இந்த தடை உத்தரவு நீடிக்கும் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உத்தர பிரதேசத்தில் 25 நாட்களில் தொடர் மாரடைப்பு மரணங்கள் உயிரிழந்த 5 பேரில் இருவர் சிறுவர்கள்



உத்தரப்பிரதேசத்தில் மட்டும் கடந்த 25 நாட்களில் மொத்தம் 5 பேர் மாரடைப்பால் உயிரிழந்துள்ள நிலையில், அதில் இருவர் குழந்தைகள் என்னும் அதிர்ச்சிகர செய்தி வெளியாகியுள்ளது.

காவல்துறையில் கான்ஸ்டபிள் பணிக்காக உடல் தகுதித் தேர்வுக்குத் தன்னை தயாராக்கி வந்த மம்தா சவுத்ரி, விளையாட்டு தின போட்டிக்கு தயாராகிக் கொண்டிருந்த சிறுமி, நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த எட்டு வயது திக்ஷா, நடைப்பயிற்சியை மேற்கொண்டுவிட்டு வீடு திரும்பிய குழந்தை மருத்துவர் டாக்டர் லவ்னி அகர்வால், இரவில் தூங்கிக்கொண்டிருந்த 29 வயதான சையத் பர்கத் ஹைதர் என்போரே திடீர் மாரடைப்பினால் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து இருதயநோய் நிபுணர் அசார் கமல் தெரிவிக்கையில் “கோவிட்க்குப் பிறகு கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில், இளைஞர்களிடையே மாரடைப்பு வழக்குகள் அதிகரித்துள்ளன. அத்தகைய நோயாளிகளுக்கு மன அழுத்தம் ஒரு பெரிய காரணியாக இருந்தது” என்று தெரிவித்துள்ளார். இது குறித்து அலிகார் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் தெரிவிக்கையில், “கடந்த 20 ஆண்டுகளில் மாரடைப்பால் ஏற்படும் இறப்பு விகிதம் என்பது 22% அதிகரித்துள்ளது. ஆரோக்கியமான ஒருவர் ஒரு மணி நேரத்திற்குள் இறந்துவிட்டால், அதை திடீர் மாரடைப்பு என்று கூறுவார்கள். கடந்த 20 ஆண்டுகளில் 22 சதவீதம் மரணம் மாரடைப்பினால் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் “சில குழந்தைகளுக்கு பிறவியிலேயே இதயநோய் இருக்கிறது. குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் மற்றும் மார்பு வலி ஏற்பட்டால், அது உடனடியாக பரிசோதிக்கப்பட வேண்டும். இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ஆய்வு நடத்தியதில், தடுப்பூசியால்திடீர்மாரடைப்புஏற்படவில்லைஎன தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் கோவிட் நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். அத்தகையவர்கள் முன்கூட்டியே பரிசோதனை செய்ய வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய வாடகைப் படகு சேவை ஆரம்பம்

காஷ்மீரில் உள்ள புகழ் பெற்ற தால் ஏரியில் ஷிகாரா எனப்படும் படகு வீடு சேவையை ஊபர் நிறுவனம் வழங்க உள்ளது. தால் ஏரியில் அவர்கள் வழங்கும் படகு சேவை தொழில்நுட்ப வசதிகளும் பாரம்பரியமும் இணைந்ததாக இருக்கும் என ஊபர் இந்தியா தலைவர் பிரப்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.

ஊபர் நிறுவனம் ஐரோப்பாவின் வெனிஸில் ஏற்கனவே படகு சேவை வழங்கி வரும் நிலையில் தற்போது ஆசியாவில் முதல்முறையாக படகு சேவையை ஆரம்பித்துள்ளது. தால் ஏரியில் ஏற்கனவே 4 ஆயிரம் ஷிகாரா படகுகள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. ஊபரின் வருகை மூலம் படகோட்டிகளின் வருவாய் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## 24 வகையான சைபர் குற்றங்களை தடுக்க மத்திய அரசு முடிவு

சைபர் குற்றங்களை தடுக்கும் நடவடிக்கையின் ஒருபகுதியாக புதிய செயலியை உருவாக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இதன்படி நம்பகத்தன்மையற்ற சீனாவின் “ட்ரூ காலர்“ எனும் செயலிக்குப் பதிலாக புதிய செயலியை அரசு உருவாக்கியுள்ளது. இதன் மூலம் சைபர் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

நாடு முழுவதும் செல்போன் மூலம் நடத்தப்படும் சைபர் தாக்குதல்கள் கடுமையாக இருந்தாலும் பெரும்பாலான குற்றங்கள் காவல்துறையின் கவனத்துக்கு கூட வருவதில்லை. பால்நிலை ரீதியான துன்புறுத்தல்கள் உட்பட சைபர் தாக்குதலில் மாட்டிக் கொண்டதை பலர் பொது வெளியில் குறிப்பிட தயங்குவதே இதற்கு காரணம்.

டிஜிட்டல் மூலமான பணம் பறிப்பு, பால்நிலை வன்முறை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், சட்ட விரோத பணப் பரிமாற்றம், போதைப் பொருட்களின் பார்சல் வந்திருப்பதாகக் கூறி நூதன மோசடி உட்பட 24 வகையான சைபர் குற்றங்களை மத்திய அரசு பட்டியலிட்டுள்ளது. இத்தகைய தாக்குதலுக்கு ஆளாகும்போது National Cyber Crime Reporting Portal அல்லது 1930 என்ற எண்ணில் உடனடியாக புகார் தெரிவிக்க வேண்டும் என தேசிய இணைய பாதுகாப்பு ஆராய்ச்சிக் கவுன்சில் இயக்குநர் தெரிவித்துள்ளார்.



இந்த பட்டியலில் 24 வகையான சைபர் குற்றங்களின் தன்மை விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மின்னணு வர்த்தகம் செய்யும் நிறுவனங்களில் இருந்து உங்கள் வாட்ஸ் அப்புக்கு லிங்க் வரும், அவை பெரும்பாலும் போலியானவை. உடனே அதை கிளிக் செய்து உள்ளே போய்விட்டால் உங்களது அனைத்து விபரங்களும் சைபர் கிரிமினல்கள் கைக்குப் போய்விடும். அதில் கவனமாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது.

சீனாவைச் சேர்ந்த “ட்ரூ காலர்” எனும் செயலியில் இடும் பதிவுகள் அனைவரும் பார்க்கும் வகையில் உள்ளது. அது மிகவும் ஆபத்தானது. இதிலிருந்து மக்களைப் பாதுகாக்க மத்திய அரசு, Calling Name Presentation - CNAP என்ற செயலியை மகாராஷ்டிரா, ஹரியானா மாநிலங்களில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தி வருகிறது. விரைவில் நாடு முழுவதும் பயன்பாட்டுக்கு வரும். இந்த செயலியைப் பயன்படுத்தனால் போலி அழைப்புகளிலிருந்து நிச்சயம் தப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஃபெங்கல் புயல் பாதிப்புகளுக்கான நிவாரண நிதி வழங்கப்படும்



ஃபெங்கல் புயல் காரணமாக, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டிவனம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள மக்கள் உணவின்றியும், இருப்பிடங்களை இழந்தும் தவிக்கின்றனர். இவர்களுக்கு தமிழக அரசு சார்பாகவும் தனியார் தொண்டு நிறுவனங்கள் சார்பாகவும் பல மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நிதியை முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புயலால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக் 2 ஆயிரம் இந்திய ஷரூபாய் வழங்கப்படும். புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக 5 இலட்சம் இந்திய ஷரூபாய் வழங்கப்படும்” என முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருக்ஷ்ணகிரி மாவட்டங்களில் பின்வரும் நிவாரண உதவிகள் வழங்கப்படுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத் திற்கு இழப்பீட்டுத் தொகையாக 5 இலட்சம் இந்திய ஷரூபாய், சேதமடைந்த குடிசைகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 10 ஆயிரம் இந்திய ஷரூபாய், முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீடு கட்டுவதற்கு முன்னுரிமை அளித்தல், மழையினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர் விவசாயிகளுக்கு 17 ஆயிரம் இந்திய ஷரூபாய், மழையினால் பாதிக்கப்பட்ட மானாவாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 8,500 இந்திய ஷரூபாய் மற்றும் எருது, பசு உள்ளிட்டவற்றின் உயிரிழப்பிற்கு 37,500 இந்திய ஷரூபாய், வெள்ளாடு, செம்மறி ஆடு உயிரிழப்பு நிவாரணமாக 4,000 இந்திய ஷரூபாய், கோழி உயிரிழப்பிற்கு நிவாரணமாக 100 இந்திய ஷரூபாய் வழங்கப்படவுள்ளதாக முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொம்மை என நினைத்து குண்டோடு விளையாடிய குழந்தைகள் மூவர் பலி



பாகிஸ்தானின் வடமேற்கு கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பீரங்கி குண்டு வெடித்ததில் 2 சகோதரர்கள் உள்பட 3 சிறுவர்கள் உயிரிழந்தனர். இந்த சம்பவம் பன்னுவின் வாசிர் உட்பிரிவின் ஜானி கேல் பகுதியில் நடந்ததாக பாக். பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுவர்கள் பள்ளிவாசலில் இருந்து வீடு திரும்பும் போது கைவிடப்பட்ட பீரங்கி குண்டு ஒன்று கிடந்துள்ளது. அதை அவர்கள் பொம்மை என்று நினைத்து விளையாடியபோது எதிர்பாராதவிதமாக அது வெடித்ததில் சிறுவர்கள் 3 பேர் உயிரிழந்தனர்.

### கண்காட்சியிலிருந்த ஒற்றை வாழைப்பழம்:

# 52 கோடிக்கு வாங்கி சாப்பிட்ட தொழிலதிபர்



சீனாவை பூர்வீகமாக கொண்ட தொழிலதிபர் ஒருவர் கடந்த வாரம் 6.2 மில்லியன் டாலருக்கு (இந்திய மதிப்பில் சுமார் 52 கோடி) ஒரு வாழைப்பழ கலைப்படைப்பை வாங்கி பிரபலமடைந்ததுடன் அந்த வாழைப்பழத்தை சாப்பிடுவதாக கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்றியுள்ளார்.

நியூயார்க்கில் உள்ள சதபி ஏல விற்பனை நிலையத்தில் நடைபெற்ற குறித்த ஏலத்தில் மவுரிசியோ கேட்டலான் என்ற கலைஞரின் 'காமெடியன்' என்று பெயரிடப்பட்ட கலைப்படைப்பு வைக்கப்பட்டது.

இந்த கலைப்படைப்பை வாங்குவதற்கு 7 பேர் ஏலத்தில் பங்கேற்றனர். அதில் தொழிலதிபர் ஜஸ்டின் சன் ஏனைய ஆறு பேரையும் விஞ்சி அந்த ஒற்றை வாழைப்பழத்தை தன்வசப்படுத்தினார்.

இந்தநிலையில் ஹொங்கொங்கில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் கலை மற்றும் கிரிப்டோகரன்சி பற்றி கூறிய ஜஸ்டின் சன் தான் வாகிய வாழைப்பழத்தையும் சாப்பிட்டதுடன் "ஏனைய வாழைப்பழங்களைவிட அது சுவையாக இருந்தது" எனவும் கூறினார்.

ஒவ்வொரு முறையும் இந்த கலைப்படைப்பு காட்சிப்படுத்துவதற்கு முன்னதாக வாழைப்பழம் மாற்றி வைக்கப்படும்.

இனி இந்த கலைப்படைப்பை காட்சிப்படுத்தும் உரிமையுடன், பழத்தை எவ்வாறு மாற்றுவது என்பது குறித்த வழிகாட்டுதலையும் சன் பெற்றிருக்கிறார்.

இந்த கலைப்படைப்பில் வைக்கப்படும் வாழைப்பழம் இதற்கு முன்பு இரு முறை சாப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2019 இல் ஒரு கலைஞரும், 2023 இல் தென் கொரிய மாணவர் ஒருவரும் இந்த வாழைப்பழத்தை சாப்பிட்டனர். ஆனால் அவர்கள் இதற்காக பணம் எதுவும் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### போர்நிறுத்தத்தைமீறி

# இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா தாக்குதல்

இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில் அந்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அத்துடன் . இதனை தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சபதம் எடுத்துள்ளார். இதற்காக காசா மீது இஸ்ரேல் போரில் ஈடுபட்டு வருகிறது.

இந்த மோதலில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் காசா பகுதியில் உயிரிழந்து உள்ளனர். இலட்சக்கணக்கானோர் காயமடைந்தும் உள்ளனர். இந்த நிலையில், இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே கடந்தவாரம் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு அதற்கான அதிகாரப்பூர்வ தகவலை அமெரிக்க ஜனாதிபதி பைடன் வெளியிட்டார். இந்நிலையில், லெபனானில் நடந்து வரும், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்புடனான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவையும் ஒப்பு கொண்டது.



எனினும், ஹிஸ்புல்லா குழுவினர் ஒப்பந்த மீறலில் ஈடுபட்டு, ஆயுதங்களை கையிலெடுக்க முற்பட்டால், நாங்கள் அவர்களைத் தாக்குவோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார். இந்த சூழலில், இஸ்ரேல் விதிமீறலில் ஈடுபட்டு விட்டது என ஹிஸ்புல்லா அமைப்பு கூறியது.

இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல், லெபனான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளின் எல்லையையொட்டி அமைந்த இஸ்ரேலின் வடக்கே மவுண்ட் டோவ் பகுதி மீது ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று 2 ரொக்கெட்டுக் குண்டுகளை ஏவி தாக்குதல் நடத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.





### ஜனவரி 20 இல் கடைசி நாள்:

# டிரம்ப் மரண எச்சரிக்கை: அதிர்ச்சியில் ஹமாஸ் குழு

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு இடையே கடந்த ஓராண்டுக்கும் மேலாக போர் நடைபெற்று வருகிறது. இதற்கு காரணம் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஹமாஸ் அமைப்பு திடீரென இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில் 2 ஆயிரம் இஸ்ரேல் மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் 200க்கும் மேற்பட்டோரை பணயக்கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர். அவர்களில் பலரை ஹமாஸ் அமைப்பு படுகொலை செய்தது.

மேலும் சிலர் விடுவிக்கப்பட்டனர். எனினும் 100க்கும் மேற்பட்டோர் தற்போதும் ஹமாசிடம் பணய கைதிகளாக உள்ளனர். அவர்களை மீட்க இஸ்ரேல் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நிலையில் ஹமாஸ் அமைப்புக்கு அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடும் எச்சரி க்கை விடுத்துள்ளார். இதுதொடர்பாக டொனால்ட் டிரம்ப் வெளியிட்ட எச்சரிக் கையில்,"ஹமாஸ் அமைப்பினர் பணயக்கைதிகளாக இஸ்ரேல் மக்களை பிடித்து வைத்துள்ளனர். மேலும் இஸ்ரேலுக்கு எதிராக போர் நடத்தி வருகின்றனர். ஹமாஸ் தாங்கள் பிடித்து வைத்துள்ள பணயகைதிகளை ஜனவரி 20 ஆம் திகதிக்குள் விடுவிக்க வேண்டும். ஜனவரி 20 ஆம் திகதி எனது ஆட்சி அமைவதற்குள் பணயகைத்திகள் விடுவிக்கப்பட வேண்டும். இல்லையென் றால் ஹமாஸ் பேரழிவை சந்திக்க வேண்டி இருக்கும்.

## வங்கதேசத்தில் பதற்றம்.. வழக்கறிஞர் மீது கொடூர தாக்குதல்




வங்கதேசத்தில் இந்து மத துறவியான சின்மோய் கிருஷ்ணதாஸ் தேசவிரோத செயலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டுள்ளார். இதை கண்டித்து தொடர்ந்து போராட்டம் நடந்து வரும் சூழலில் அவருக்கு ஆதரவாக செயல்பட்ட வழக்கறிஞர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தற்போது அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சையில் உள்ளார்.

வங்கதேசத்தில் நடந்த வன்முறையை தொடர்ந்து பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை ராஜினாமா செய்து நம்நாட்டில் தஞ்சமடைந்துள்ளார். தற்போது வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ளது. நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் முகமது யூனுஷ் தலைமையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் தான் தற்போது வங்கதேசத்தில் இந்து துறவி கைது செய்யப்படுவது மற்றும் இந்துக்களின் உரிமை பறிக்கப்படுவது போன்ற சம்பவங்கள் நடந்து வருகின்றன. இதனால் இந்துக்கள் போராட்டத்தை தொடங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணில் இருந்து வடியும் "ரத்தம்.." உயிர் போன பிறகும் பரவும் ஐ வைரஸ்!

தற்போதைய நிலையில் திடீர் திடீரென என புதுப்புது வைரஸ்கள் பரவுவைத்து சாதாரண மாகிவிட்டது. இதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் பொருளாதார பாதிப்புகளும் மிக மோசமாக இருக்கிறது. கொரோனா, மங்கி பாக்ஸ் எனப் பல வைரஸ்கள் பரவியுள்ள நிலையில், இதற்கு தடுப்பூசிகூட இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என கூறப்படுகின்றது. கடந்த 2019 இறுதியில் பரவ தொடங் கிய கொரோனா நம்மை எந்தள வுக்குப் புரட்டிப் போட்டது என்பது அனைவருக்கும் தெரியும். இப்போது புதிதாக மார்பர்க் வைரஸ் எனப்படும் ப்ளீடிங் ஐ வைரஸ் பரவி வருகிறது.

இந்த ப்ளீடிங் ஐ வைரஸ் இப்போது ஆபிரிக்க நாடுகளைப் புரட்டிப் போட்டு வருகிறது. குறிப்பாகக் கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் பாதிப்பு மிக மோசமாக இருக்கிறது. இதனால் ருவாண்டாவில் மட்டும் சுமார் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ப்ளீடிங் ஐ வைரஸ் எனப்படும் இந்த மார்பர்க் வைரஸ் நோய் மனிதர்களுக்கு ஏற்படும் மிகவும் ஆபத்தான நோய் என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.. பழம் தின்னும் வௌவால் இனத் திலிருந்து இந்த வைரஸ் பரவுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.



### உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ள

# சாரதி இல்லா நீண்ட தூர மெட்ரோ ரயில் !





சௌதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் மெட்ரோ ரயில் சேவை செயல்பாட்டுக்கு வந்துள்ளது. ரியாத் மெட்ரோவின் 3 வழித்தடங்கள் மீதமுள்ள 3 வழித்தடங்கள் ஜனவரி மாத தொடக்கத்திற்குள் செயல்பாட்டுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு நாடுகள் அதிக எண்ணெய் வளம் கொண்டவை ஆகும். உலகின் மொத்த எண்ணெய் உற்பத்தியில் ஐக்கிய அரபு நாடுகளின் பங்கு அதிகமாகும். இதனால் பணக்கார நாடுகளாகவும் அரபு நாடுகள் உள்ளன. குறிப்பாக சௌதி அரேபியா, துபாய் போன்ற நகரங்களில் உள்கட்டமைப்பு அசுர வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் காரணமாக இந்தியர்கள் உள்பட பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் வேலை உள்ளிட்ட காரணங்களுக்கு அரபு நாடுகளுக்கு செல்கின்றனர்.

அரபு நாடுகள் உலகின் முன்னோடிகளாக மாறி வருகின்றன. 2030 ஆம் ஆண்டை இலக்காக கொண்டு வளர்ச்சி பாதையில் அரபு நாடுகள் பயணித்து வருகின்றன. அதற்காக விமான நிலையம், வீதிகள், மேம்பாலங்கள் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வருகின்றன. இந்த நிலையில் சௌதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் உலகின் முதல் மிகநீண்ட சாரதி இல்லா மெட்ரோ இயக்கப்படுகிறது.

**உலக நாடுகள் வியப்பு**

ரியாத் மெட்ரோ ரயில் வழித்தடம் மற்றும் ரயில் நிலையங்கள் உலக அதிசயங்கள் போல் ஹைடெக் முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றின் தோற்றத்தை கண்டால் உலக நாடுகளே வியப்பில் ஆழ்ந்துவிடும் என கூறப்படுகிறது. இது சௌதி அரேபியாவின் 2 ஆவது மெட்ரோ திட்டம் ஆகும். ஏற்கனவே அல் மஸ்ஸார் அல் முகதஸ் ஸா மெட்ரோ வழித்தடம் ஹஜ் யாத்திரைக்காக மெக்காவில் கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் செயல்பாட்டுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டைட்டன் கோள்: எலான் மஸ்கை நாடிய நாசா!






சனி கிரகத்தின் மிகப்பெரிய நிலவான டைட்டனை ஆய்வு செய்வதற்கு எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் நாசா செயல்பட்டு வருகிறது. ரயில்கள் டிராகன்பிளை டிரோன், டைட்டனை ஆய்வு செய்ய ஜுலை மாதம் விண்ணில் ஏவப்பட உள்ளது.

எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் ஃபால்கன் ஹெவி ரொக்கெட்டை கொண்டு டைட்டனுக்கு நாசாவின் புதிய டிராகன்பிளை பயணத்தை செயல்படுத்த உள்ளது.

புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெணி மையத்தில் இருந்து 2028 ஆம் ஆண்டு ஜுலை 5 மற்றும் 25அம் திகதிக்குள் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டது. இந்த திட்டத்திற்கான ஏவுகணை ஒப்பந்தத்தின் மதிப்பு 256.6 மில்லியன் டாலர் ஆகும்.

டைட்டனில் உயிர்கள் வாழ சாத்தியம் உள்ளதா? பூமியை போன்று வானிலை மற்றும் திரவ வடிவங்களை சனி கோளில் காண முடிவதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். எனவேதான் சனியின் நிலவான டைட்டனை ஆய்வு செய்ய நாசா துடித்து வருகிறது.

# டொன் பிராட்மேனின் சாதனையை சமன்செய்ய காத்திருக்கும் விராட்





இந்திய கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு, போடர்–கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி பார்முக்கு திரும்பியிருந்தார். அவர் இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களை குவித்திருந்தார்.

இந்தப் போட்டியில் இந்திய அணி 295 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையில் அடிலெய்டில் இடம்பெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில், சர் டொன் பிராட்மேனின் மிகப்பெரிய சாதனையை சமன் செய்யும் முனைப்பில் விராட் கோலி உள்ளார். 1930–1948 வரை இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த பிராட்மேன் 19 போட்டிகளில் 11 சதங்களை அடித்ததன் மூலம், ஒரு நாட்டிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அதிக சதம் அடித்த வீரர் என்ற மாபெரும் சாதனையை படைத்துள்ளார்.

மறுபுறம் விராட் கோலி, 2011ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு, 43 போட்டிகளில் விளையாடி 10 சதங்களை அடித்துள்ளார்.

இந்நிலையில், அடிலெய்டில் இடம்பெறும் போட்டியில் பிராட்மேனின் சாதனையை சமன் செய்வதற்கான பிரகாசமான வாய்ப்பு விராட் கோலிக்கு உள்ளது.

இதனால், டிசம்பர் ஆறாம் திகதி தொடங்கும் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இடையேயான பகல்–இரவு டெஸ்டில் விராட் கோலி சதம் அடிப்பதற்கு முனைப்பு காட்டுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்து அதிக சதமடித்த வீரர்கள்

**டொன் பிராட்மேன் (அவுஸ்திரேலியா) - 11 இங்கிலாந்தில்**
**விராட் கோலி (இந்தியா) - 10 ஆஸி.**
**ஜெக் ஹோப்ஸ் (இங்கிலாந்து) - 09 அவுஸ்திரேலியாவில்**
**சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) - 09 இலங்கையில்**
**சர் விவ் ரிச்சர்ட்ஸ் (மேற்கிந்திய தீவுகள்) - 8 இங்கிலாந்தில்**
**சுனில் கவாஸ்கர் (இந்தியா) - 7 மேற்கிந்திய தீவுகள்**




# சூதாட்ட புகார்: தென்னாபிரிக்க முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கைது

தென்னாபிரிக்க முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் லோன்வாபோ சோட்சோபே (வயது 40), தமி சோல்கிலே (வயது 44) மற்றும் எதி எம்பலாட்டி (வயது 43) ஆகியோர் ஆட்டத்தின் முடிவை முன்கூட்டியே நிர்ணயம் (சூதாட்டம்) செய்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

2015ஆம் ஆண்டு உள்ளூர் டி20 தொடரான ராம் ஸ்லாம் தொடரில் குறித்த 3 பேரும் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்நிலையில் தற்போது இவர்கள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



போட்டியின் முடிவை மாற்றுவதற்காக மூவரும் பரிசுகளை ஏற்றுக்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்ட நிலையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் இறுதி தீர்ப்பு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, முன்னாள் வீரர்கள் மூவரையும் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

# என்னை விட அவர் கோலியின் மிகப்பெரிய ரசிகர்

## - அவுஸ்திரேலிய பிரதமர்

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி போர்டர் –கவாஸ்கர் கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 1–0 என்ற கனக்கில் முன்னிலை வகிக்கிறது.

இதனையடுத்து இவ்விரு அணிகளும் பயிற்சி போட்டிக்கு முன்பாக இந்திய வீரர்கள் அவுஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானீஸை நேரில் சந்தித்தனர். அவுஸ்திரேலிய நாடாளுமன்ற வளாகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. அப்போது இந்திய வீரர்களுடன் ஆண்டனி அல்பானீஸ் சுவாரஷ்யமான கலந்துரையாடினார். அப்போது அவர் ஏனைய வீரர்களை காட்டிலும் விராட் கோலியிடம் அதிகமாக பேசியது ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.

இந்நிலையில் தம்முடைய மருத்துவர் தம்மை விட விராட் கோலியின் மிகப்பெரிய ரசிகர் என்று ஆண்டனி அல்பானீஸ் சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு:– ”என்னுடைய தனிப்பட்ட மருத்துவர் விராட் கோலியின் மிகப்பெரிய ரசிகர். அவருக்கு விராட் கோலியை எந்தளவுக்கு பிடிக்கும் என்பதை வார்த்தைகளால் விவரிப்பது கொஞ்சம் கடினம். அவரை சமீபத்தில் பார்த்தபோது விராட் கோலியை நான் பார்க்கப் போகிறேன் என்று கூறினேன். அப்போது விராட் கோலியிடம் ஒரு ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று அவர் என்னிடம் சொன்னார்” என்றார்.



# போட்டியின்போது மைதானத்தில் மயங்கி விழுந்த டென்னிஸ் வீரர்..

## - பரபரப்பு சம்பவம்

துருக்கியை சேர்ந்த டென்னிஸ் வீரர் அல்டக் செலிக்பிலெக் (வயது 28). இவர் துனிசியாவில் நடைபெற்ற ஐடிஎப் டென்னிஸ் தொடரின் அரையிறுதி போட்டியில் யாங்கி எரெல் உடன் மோதினார். இந்த போட்டி நேற்று நடைபெற்றது.

போட்டி ஆரம்பமாகி முதல் செட் நடைபெற்று கொண்டிருந்த வேளையில், திடீரென்று அல்டக் செலிக்பிலெக் மைதானத்தில் மயங்கி விழுந்தார். இந்த சம்பவம் அங்கிருந்தவர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. உடனடியாக அவருக்கு முதலுதவி செய்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து வெளியான முதற்கட்ட தகவலின் படி, மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு காரணமாக அல்டன் செலிக்பிலெக் மைதானத்தில் மயங்கி விழுந்ததாக கூறப்பட்டுள்ளது. தற்போது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.






# இந்தியா - அவுஸ்திரேலியா:

# 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் களமிறங்குகிறார் மிட்செல் மார்ஷ்

இந்தியாவுக்கு எதிராக பெர்த் நகரில் கடந்த வாரம் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது அவுஸ் திரேலிய அணியின் ஆல்ரவுண்டரான மிட்செல் மார்ஷுக்கு பந்து வீச்சின் போது கணுக்காலில் வலி ஏற்பட்டது. இதனால் அவர், எதிர்வரும் 6ஆம் திகதி அடிலெய்டில் ஆரம்பமாகும் 2–ஆவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்பாரா என்பதில் சந்தேகம் நிலவி வருகிறது. இதற்கிடையே அவருக்கு மாற்று வீரராக பியூ வெப்ஸ்டரை அணியில் சேர்த்தது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை.

இந்நிலையில் 33 வயதான மிட்செல் மார்ஷ் கூறும்போது, “எனது உடல் நிலை நன்றாக இருக்கிறது. அடிலெய்டு டெஸ்ட் போட்டியில் நான் விளையாடுவேன்” என்றார்.

மிட்செல் மார்ஷ் உடற்தகுதியுடன் இருப்பது அவுஸ்திரேலிய அணிக்கு கூடுதல் பலம் அளிக்கக்கூடும். ஏனெனில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜோஷ் ஹேசில்வுட் இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக 2–வது டெஸ்ட் போட்டியில் இருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# IPL 2025 : தோனியுடன் ஓய்வுபெறவுள்ள மற்றொரு சிஎஸ்கே வீரர்?

## பிரமாண்ட ஏற்பாடு செய்யும் நிர்வாகம்!





சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில், தோனியுடன் சேர்த்து, மற்றொரு நட்சத்திர வீரரும் ஓய்வுபெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஐபிஎலில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, 5 முறை கிண்ணத்தை வெல்ல முக்கிய காரணமாக திகழ்ந்த அதன் தலைவர் மகேந்திரசிங் தோனிக்கு தற்போது, 43 வயதாகிறது.

கடந்த இரண்டு ஐபிஎல் தொடைகளில், காலில் வலியுடன்தான் அவர் விளையாடினார். குறிப்பாக, கடந்த போட்டியில் , காலில் அதிக வலி இருந்ததால், கடைசி 10 பந்துகள் இருந்தபோது துடுப்பெடுத்தாட வந்தார். 10 பந்துகளை எதிர்கொண்டாலும், அவர் அதில் அதிரடி காட்டி, தனது ஓட்ட எண்ணிக்கையை கிடுகிடுவென உயர்த்தினார்.

இந்நிலையில், ஐபிஎல் 18ஆவது சீசனில் விளையாடுவது குறித்து, நீண்ட யோசனைக்கு பிறகு, சமீபத்தில்தான் அதனை உறுதி செய்தார். மேலும், 18ஆவது சீசனில் அனைத்து போட்டிகளிலும் விளையாடாமல், சில போட்டிகளில் ஓய்வு எடுக்கவும் வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால், டிவோன் கான்வேவுக்கு கீப்பர் பயிற்சியை அளித்து, தயார்நிலையில் வைக்க சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மகேந்திரசிங் தோனி இப்படி, காலில் வலியுடன் விளையாடுவதை, ரசிகர்களும் விரும்பவில்லை. தோனி ஓய்வுபெற்று, சிஎஸ்கேவின் பயிற்சியாளராக செயல்பட வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில், மகேந்திரசிங் தோனி, ஐபிஎல் 2025 தொடரோடு ஓய்வுபெறுவது உறுதியாகிவிட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. சென்னை சேப்பாக்கத்தில் நடைபெறும் கடைசி சிஎஸ்கே லீக் ஆட்டத்தோடு, தோனி ஓய்வுபெறுவார் என்றும், இதற்காக பிரமாண்ட ஏற்பாடுகளை செய்ய சிஎஸ்கே திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

அஸ்வினும்:

மகேந்திரசிங் தோனியுடன், ரவிச்சந்திரன் அஸ்வினும் ஓய்வுபெற அதிக வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது. அஸ்வினுக்கு 38 வயதாகிறது. பந்துவீச்சில், அஸ்வின் சிறப்பாகத்தான் செயல்படுகிறார்.

மேலும், பேட்டிங்கிலும் ஓரளவுக்கு அதிரடி காட்டுகிறார். இருப்பினும், அஸ்வினின் பிட்னஸ் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகையால், அடுத்த ஆண்டு ஐபிஎல் தொடரோடு, ரவிச்சந்திரன் அஸ்வின் கிரிக்கெட்டில் இருந்து, முழுவதுமாக ஓய்வுபெற்றுவிட்டு, பிறகு வர்ணனையாளராக செயல்பட அதிக வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது.

ஐபிஎலில், மீண்டும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடுவதுதான் எனது கனவு என, முன்பு அஸ்வின் பேசியிருந்தார். அவரது கனவு, ஐபிஎல் 2025 தொடரில், நிறைவேற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால்2024 டிசம்பர் 04ஆம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.